பக்கங்கள்-16 | 21.ஆவணி.2022 | விலை–40.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –382



# சீனா , இந்திய விவகாரத்தில் ஜனாதிபதியின் இரட்டை வேடம்





## தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து ரெலோவை விலகச்சொல்ல சுமந்திரன் யார்? – ஜனா எம்.பி.காட்டம்



## பூகோள அரசியலுக்குள் காய்நகர்த்தப்படும் இலங்கை பொருளாதாரம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

# சீனா, இந்திய விவகாரத்தில் ஜனாதிபதியின் இரட்டைவேடம்



இலங்கை மற்றும் இந்தியா என்பன ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். இவை இரண்டும் ஒரே குணாம்சங்களைக் கொண்ட நாடுகளாகும். எனவே இவ்விரு நாடுகளுக்கும் தனியான பயணம் கிடையாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்திய - இலங்கை உறவுகளுக்கு மாத்திரமன்றி பிராந்தியத்திற்கும் உலகிற்கும் பொதுவான பல பிரச்சினைகளை இனங்கண்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி , அவற்றைத் தீர்ப்பதற்கு துரிதமாக செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட டோனியர் 228 முதலாவது கடல்சார் ரோந்து விமானத்தை இலங்கை விமானப்படைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே ஆகியோர் தலைமையில் கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் திங்கட்கிழமை (15) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிடுகையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படுவது பொதுவான குணாம்சங்களாகும். இரு தரப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். எனவே இரு நாடுகளுக்கும் தனியான பயணம் இல்லை.

வரலாறு இந்தியாவையும் இலங்கையையும் ஒன்று சேர்த்திருப்பதால் எதிர்காலத்திலும் தொடர்ந்து ஒன்றாக பயணிக்க வேண்டும். பிராந்தியம் மற்றும் உலக நாடுகளின் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்து சமுத்திரத்தில் உள்ள சிறிய நாடான இலங்கை, உலக வல்லரசாக முன்னேறி வருகின்ற இந்தியாவின் வகிபாகத்தை அவதானித்துக் கொண்டிருக்கிறது.

எனவே அவர்களுடன் புரிந்துணர்வுடன் செயற்படும் திறன் அரசாங்கத்திற்கு காணப்படுகிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75 வருட நிறைவை முன்னிட்டு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்திய - இலங்கை உறவுகளுக்கு மாத்திரமன்றி பிராந்தியத்திற்கும் உலகிற்கும் பொதுவான பல பிரச்சினைகளை நாம் இனங்கண்டுள்ளோம். அவற்றைத் தீர்ப்பதற்கு துரிதமாக செயற்பட்டு வருகின்றோம். இராமாயணத்தைப் பொறுத்தவரை, அது இரு நாடுகளுக்கும் பொதுவான இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருப்பதோடு ஒரு சில சிறிய வேறுபாடுகள் மாத்திரமே உள்ளன. இந்தியா, இராமனை மாவீரனாகக் கருதும் நிலையில் , இலங்கை இராமன், இராவணன் இருவரையும் மாவீரர்களாகக் கருதுகிறது என்றார். கடந்த 2018 ஜனவரி 9 ஆம் திகதி, புதுடில்லியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு பாதுகாப்புப் பேச்சுவார்த்தையின் போது, இலங்கையின் கடல்சார் கண்காணிப்புத் திறனை மேம்படுத்துவதற்காக இந்தியாவிலிருந்து இரண்டு டோனியர் ரக கடல்சார் கண்காணிப்பு விமானங்களை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

பின்னர், இலங்கையின் கோரிக்கையை ஏற்று, இந்திய கடற்படைக்கு சொந்தமான டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானம் ஒன்றை முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்க இந்தியா ஒப்புக்கொண்டது. புதிய விமானம் தயாரிக்க சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதே இதற்குக் காரணம் ஆகும்.

இந்த முதல் இரண்டு ஆண்டுகளின் முடிவில், புதிய டோனியர் 228 கடல்சார் ரோந்து விமானத்தை இலவசமாக வழங்க இந்தியா விருப்பம் தெரிவித்ததுடன், பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் இலங்கைக்கு மற்றொரு புதிய விமானத்தை இந்தியா வழங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ கூறியுள்ளார்.

ஏட்டிக்கு போட்டியாக இரு நாடுகளும் உதவிகளை வெளிப்படையாகவும் மறைமுகம் ஆகவும் இலங்கைக்கு வழங்குகின்ற அதே நேரம் இவ்விரு நாடுகளிடம் இருந்து இலங்கை தமக்கு சாதகமான நிலைப்பாட்டையே கொண்டுள்ளது

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிக்கலின் நடவடிக்கைகளை பொறுத்தவரையில் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இரு நாடுகளையும் புறக்கனிக்ககூடாது என்பதிலும் தனது சுயலாபத்திற்காக ஆட்சி அதிகாரத்தில் இருந்தது விலகும் வரையும் மீளவும் ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்தும் எதிர்கால திட்டத்திலும் தனது அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகிறார்.

ஜனாதிபதியின் நரித்தந்திரம் என்பது அனைத்து பதவிகளும் இல்லாத நேரத்தில் பாராளுமன்ற உறுப்பிராகி பிரதமராகி பதில் ஜனாதிபதியாகி தற்போது நிரந்தர ஜனாதிபதியாகி தனது முழுமையான அதிகாரத்தை தற்போது பயன்படுத்தி வருகிறார் என்பதே இன்று அவரின் அரசியல் நிலைப்பாடாகும்.

**இரணியன்**



தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழ் தரப்புக்களின் ஒற்றுமை ஏன் அவசியமாகிறது?

பொதுவாக 30ஆண்டு காலங்களாக தீர்க்கப்படாது பிரச்சனையாக தமிழ் மக்களது பிரச்சனைகள் காணப்படுகின்றது. குறிப்பாக தாயகம்,தேசியம்,சுயநிர்ணய உரிமை,என்கின்ற அடிப்படையில் தீர்வு ஒன்றிற்காய் போராட்டகளத்தில் இறங்கிய ஆயுதப்போராட்ட குழுக்களின் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில். அரசியல் ரீதியில் ஆன தீர்வு ஒன்றிற்காய். தற்பொழுது தமிழ் தரப்பு பேச்சுக்களை நடத்துகின்ற அதே நேரம் நாட்டின் பொருளாதாரம் இக்கட்டான சூழ்நிலையை எட்டிப்பிடித்துள்ளது.

இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட புலம் பெயர்ந்த ஐந்து அமைப்புக்கள் தற்பொழுது தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் அங்கம் வகிக்கும் 228க்கு மேற்ப்பட்பேடார். இலங்கையில் வந்து தமது முதலீடுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்களை நம்பி எப்படி இலங்கைக்கு வருவது என்ற சந்தேகம் தற்பொழுது எழுப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை அரசு தனது இராஜதந்திர நடவடிக்கையாக புலம்பெயர்ந்த டயஸ்போராக்களையும் உள்வாங்கி செயற்பட தீர்மானித்திருப்பது ஒட்டுமொத்த குறிப்பாக 15லட்சம் தமிழ் பேசும் மக்களுக்கும் வைக்கும் ஆப்பாகவே இதனை கருதமுடிகிறது. ஆகவே தான் புலம்பெயர் தளத்தில் தமிழ் தரப்பு இவை தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்ததொன்றாகும்.

உள்ளகப்பொறிமுறையின் கீழ் தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது சாத்தியம் அற்ற ஒன்றாக இருப்பினும், அதற்கு மாற்று வழி என்ன என்பதனை கண்டறிந்து அதற்கு அமைவாக செயற்பட வேண்டும். மாறி மாறி வந்த சிங்கள ஆட்சியாளர்கள் அனைவரும் தமிழர் தரப்பில் குறிப்பாக தீர்வுத்திட்டம் தொடர்பில், எந்தவித கரிசணையும் காட்டாது சர்வதேச நாடுகளின் உதவிகளை பெற்று ஒரு இனத்தின் விடுதலைக்காய் இறுதிவரை போராடிய விடுதலைபுலிகளின் இயக்கத்தையும் அதன் போராட்டத்தினையும் பயங்கரவாதிகள் என சர்வதேச பரப்பில் முத்திரை குத்தினார்கள்.

இன்றைய சூழ்நிலையில் மீண்டும் பிராபாகரனுடைய போராட்டம் வேண்டும் எனவும் முள்ளிவாய்க்காலில் அரச பயங்கரவாதத்தால் கொலை செய்யப்பட்ட மக்களுக்காக காலி முகத்திடலில் அஞ்சலி செலுத்தியுள்ளமையானது சிங்கள மக்கள் தற்பொழுது தமிழ் தரப்பிற்கு இதுவரை காலமும்அநீதிகளை இளைத்தார்கள் என்பதே பொருள் ஆகும்.

தற்போதைய சூழ்நிலையில் சர்வகட்சி அரசாங்கம் அமையப்பெறுமாயின் ஓரளவு இனவாத போக்கை கட்டுப்படுத்த முடியும் என்பதே பலரின் எதிர்பார்ப்பாகும். ஆகவே தமிழ் தரப்பு கட்சிபேதங்களை மறந்து ஒரு குடையின் கீழ் செயற்படுமாயின் மாத்திரமே தமிழ் மக்களுக்கான தீர்வினைப்பெற்றுக்கொள்ள முடியும் என்பது இன்றைய அரசியல் பரப்பில் ஏற்ப்பட்டுள்ள நிலை ஆகும்.

## 187 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



அதிகமாக இவ்வாறான நிலைக்குள்ளானவர்கள் சூட்டுக்கும் தற்காப்பிற்கும் வசதியற்ற நிலைக்குள் தள்ளப்பட்டு, இடது பக்க ஒழுங்குக்குள் அகப்பட்டுச் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். வேகக் காட்டுச் சமரில் சகலதும் மிக வேகமாக நடைபெறுகின்றன. ஏதிரியை விட நீங்கள் வேகமாகச் சிந்திக்க வேண்டியவர்களாகின்றீர்கள்.

அதாவது அவன் தன்னைப்பற்றிச் சிந்திக்கவேண்டியவர்களாகின்றீர்கள். அதாவது அவன் தன்னைப்பற்றி சிந்திக்க முன்னராகும். அவன் இன்னமும் எங்கேயும் ஓடாமலிருக்கின்ற போது, நீங்கள் உங்களது சுடுகலன் சூடு எவ்விடத்தில் அவனைச் சந்திக்கும்(மேலே குறிப்பிட்ட முறையில்) என்பதைத் தெரிந்திருக்கவேண்டும்.

இதுவே சந்திப்புச் சூட்டுமுறை என அழைக்கப்படுகின்றது. இந்த வழிமுறைக்கும் வயது நூற்றாண்டுகளாகும். இந்த வழிமுறை இப்பொழுதும் பெரு வெற்றிகரமாக தைகா, வெப்பவலயம் போன்ற பிரதேசக் காடுகளில் பயன்படுத்தப்படுகின்றது.

பிரதேசம் ஒன்றில் தேடுதல் மேற்கொள்கின்ற தெனும் போது, வழக்கமாக எதிரியைக் காட்டிலிருந்து வெளியே இழுத்து, திறந்த வெளியிமொன்றிற்குக் கொண்டுவந்து, அங்கே இயந்திர சுடுகலன்கள், ஆட்டிலறிச் சூடுகள், விமானத் தாக்குதல்கள் போன்றவற்றிற்குள் அகபடச்செய்யும் பணியே முன்வைக்கப்படுகின்றது. தங்களது காலத்தில் ஜேர்மனியர்கள் கவபாக்கின் படைகளோடு இவ்வாறே செயற்பட்டார்கள். அவர்களை மலைக்குச் செல்லவைத்து, அங்கே அவர்கள் ஆட்டிலறியைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டதோடு, விநியோக வண்டித்தொடர்களையும் இழந்து நிர்க்கதி நிலைக்குள்ளாக்கப்பட்டனர்.

துங்களை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து கவ்பாக்கின் ஆட்கள் இம் முற்றுகையிலிருந்து வெளியேறினர். இவ்வாறே யூகோஸ்லாவியாவிலும் ஜேர்மனியர்களது நடவடிக்கை இருந்தது. ஆங்கே கெரில்லாக்களைக் காட்டிலிருந்து வெளியேற்றி, குளிர்காலத்தில் உணவுப்பொருட்கள் மற்றும் வெடிப்பொருட்களற்ற நிலையில் மலைக்கு விரட்டிவிட்டனர்.

இவ்வாறே குர்திஸ்தான் போராளிகளுக்கெதிராக ஈரானிலும் ஈராக்கிலும் துருக்கியிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. யார் எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்றார்களோ அவர்களுக் கெதிராகப் பனியிலுள்ள தடயங்கள் வேலை செய்கின்றன. குளிர்காலத்தில் எகேர்கள் கெரில்லாக் காட்டுப்பாதைகளில் குறைந்தளவே காத்திருக்கின்றார்கள். பாரிய இராணுவப் படைகள் திரட்டப்பட்டு, கெரில்லாக்களின் கதகதப்புக்கும் உணவுப் பொருட்களுக்குமான பாதைகள் தடுக்கப்படுகின்றன. கேரிலர்லாக்களின் செயற்பாடுப் பிரதேசத்தில் இறுக்கமான அனுமதிப் பத்திர நடை முறை அமுலாக்கப் படுவதுடன், கண் காணிப்புக்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

கெரில்லாக்களின் முகாம்கள் மீது விமானப்படை தாக்குதல் தொடுக்கின்றது. குளிர்-இளவேனிற் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற முற்றுகை கெரில்லாக்களுக்கு மிகவும் துயரமானதாகும். இளவேனிற்காலத்தில் நிலம் சேறா மாறுகின்றபொழுது, பெருமெடுப்பிலான காட்டுத் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுகின்றது.

இதன் நோக்கம் கெரில்லாக் குழுக்களை அவர்கள் தம் வதிவிடத்திலிருந்து வெளிக்கொண்டு வருதலேயாகும். கதகதப்பின்னை, தலையின் மேல் கூரையில்லாமை, காலின் கீழ் ஈரம், பசி, பெருமளவில் காயமடைந்தவர்களின் இரும்பு ஆகியன தமது பணியைச் செவ்வனே செய்கின்றன. உக்ரேனியத் தேசியவாதிகள் அமைப்பினது உக்ரேனியக் கெரில்லா இராணுவத்தினதும் பெண்ஜெரெவ் கிளர்ச்சியாளர்களின் பிரதான பகுதி 1946 ஆம் ஆண்டு மேற்கு உக்ரேனில் பெப்ரவரி - ஏப்ரல் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின் போது அழிக்கப்பட்டது. இன்றுவரை அங்குள்ளவர்கள் அதை மறக்கவில்லை.

உண்மையில் மிக நுட்பமாகவும் அறிவு பூர்வமாகவும் செயற்பட்ட ஜேர்மனியர்களால் கெரில்லாக்களுடனான போரின் அனுபவம் மிகப் பெரியளவில் பெற்றுக்கொள்ளப்பட்டது. எகேர்கள் பற்றாலியன் கட்டமைப்பாக உருவாக்கப்பட்டனர்.

காட்டில் பற்றாலியன் நகர்வுத்திறன் கூடியதாகவும் நிர்வகிக்க இலகுவானதாகவும் இருந்தது. ஆனால், டிவிசன் அவ்வாறல்ல. கெரில்லாக்களின் முகாம்களை அழித்தல் முன்னரே தீட்டிய திட்டமிடலிலும் அதனைத் துல்லியமாக நிறைவேற்றுதலிலும் தங்கியிருந்தது. கொடிய சமரின் பின், தங்களுக்கு வசதியான தங்கலிடத்தில் கெரில்லாக்கள் ஆறுதலடைவதற்குச் சந்தர்ப்பமளித்தனர்.

எந்தவித செயற்பாடுமின்றி அவர்களது விழிப்புணர்ச்சியை மழுங்கடையச் செய்தனர். தங்கலிடத்தை முற்றுகையிடல் சூரியனின் கடைசிக்கதிர்கள் மறைகின்ற தருணத்தில் மேற்கொள்ளப்பட்டது.

தூழப்பறக்கும் விமானங்கள் கெரில்லாக்களை வெளிக்கிளம்ப முடியாத நிலைக்குத் தள்ளியதுடன், வெளிக்கள அவதானிப்பும் சிரமமாகியது. இவ்வாறான காப்புடன் எண்ணிக்கையில் கொம்பனியை விஞ்சாத ஆளணிகளைக் கொண்ட தாக்குதலணிகள் பல்வேறு திசைகளிலிருந்து நெருங்கத்தொடங்கின.

தொடர்வான்....

# தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து ரெலோவை விலக்கச்சொல்ல சுமந்திரன் யார்? – ஜனா எம்.பி.காட்டம்

**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையிலே சர்வதேச நாடுகளின் உதவியோடு புலம்பெயர்ந்த டயஸ்போராக்களுடன் தொடர்பினை ஏற்படுத்தியிருக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்தினை வழங்குவதாக இத் தருணத்திலே அறிவித்திருக்கின்றார் இது எந்தளவில் சாத்தியமாகும்.**

பதில் : புதிதாக தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி அவர்கள் அவரது கடந்த சிம்மாசன உரையிலே தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டம் நீண்டகாலமாக போராடிக்கொண்டிருக்கும். தமிழிழனத்திற்கான ஒரு தீர்வு திட்டம் கொடுக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார். அவர் எந்த அடிப்படையில் அதனை கூறியிருக்கின்றார் என்பதனை பொறுத்திருந்து தான் நாங்கள் பார்க்க வேண்டும். அதே வேளையில் புலம்பெயர் அமைப்புக்களையும் பொருளாதார மீள்ச்சியிலே பங்குபற்ற வேண்டும் என்பதனையும் சில புலம்பெயர் அமைப்புக்களுக்கும் தனிநபர்களுக்கும் கோட்டபாய ஆட்சிகாலத்திலே இருந்த தடையை நீங்கி இருக்கின்றார்.

இந்த இனப்பிரச்சனை சம்மந்தமாக நீண்ட காலமாக அழுத்தம் கொண்ட ஒருவர் அந்த வகையில் அவர் இந்த இனப்பிரச்சனையோடு சம்மந்தப்பட்டவர் அவருக்கு இரண்டு முகங்கள் இருக்கின்றது. ஒரு நல்ல முகமும் இருக்கின்றது. ஒரு கெட்ட முகமும் இருக்கின்றது. அவரது இளைமைக்காலங்களிலே இளமை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலங்களிலே நடைபெற்றவை நமக்கு தெரியும். அந்த வேளையிலே சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த காலத்திலே நீலம்திருச்செல்வம் .ஜீ.எல். பீரிஸ்போன்றவர்களினால் உருவாக்கப்பட்ட அந்த பொறி பிராந்தியங்களினால் உருவாக்கப்பட்ட இந்த நெருப்பு பொறியை பாராளுமன்றங்களில் திணித்தவரும் ரணில் தான் அதே நேரத்திலே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தங்களும் செய்தவர் அவருடைய வரலாறு நல்லவை.கெட்டவைகளை தாண்டி ஒரு வரலாறு இருக்கின்றது.

தற்போதைய இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கியமான காரணம் இந்த இனப்பிரச்சனை தான் என்பதை அவர் உணர்ந்துக்கொள்ள வேண்டும் ஏனென்றால் போருக்காகவே இலங்கை போர் தளபாடங்களுக்காகவே இலங்கை கடந்த காலங்களிலே கூடுதலான மில்லியன் கணக்கான பொருட்களை செலவழித்து இருந்தார்கள். தற்பொழுது போர் இல்லாத சூழ்நிலை என்றாலும் இனப்பிரச்சனைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள கூடியதான நிரந்தர தீர்வினை வழங்கினால் தான் எதிர்காலத்திலும் இலங்கை ஒரு சூட்சமான நாடாக இருக்குமென்பதை அவர் உணர வேண்டும். அவர் உணர்ந்துக்கொள்ள வேண்டும்.

அந்தவகையில்அவர்எதைநினைத்துதமிழ் மக்களுக்கு நீண்ட கால போராட்டத்திற்கு ஒரு இனப்பிரச்சனைக்கு தீர்வை கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றாரோ அதை தமக்கு சாதாகமாக நினைத்து செயற்படுத்துவராக இருந்தால் இலங்கை சுபிட்சமாக இருக்கும் இல்லையென்றால் மீண்டும் ஒரு அழிவை பொருளாதார ரீதியாகவோ அல்லது ஏனைய விடயங்கள் சார்பாகவோ நடைபெறும் என்பது அவருக்கு தெரியும் அதனால் 2015இல் இருந்து 2019 காலக்கட்டங்களிலே அவர் தலைமைதாங்கிய அரசினால்




பாராளுமன்றம் ஒரு அரசியல் சாசன சபையாக மாற்றப்பட்டு புதிய அரசியல் அமைப்பு மாற்றம் ஒன்றை உருவாக்குவதற்காக முயற்சிகள் நடைபெற்றது. ஏனென்றால் அந்த வகையில் அவர் ஒரு புதிய அரசியல் அமைப்பொன்றை கொண்டு வந்து இந்த பிரச்சனைக்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பது தான் அவரது தலையாய கடமை.

**கேள்வி : அரசியல் நோக்கர்கள், ஆய்வாளர்களின் கருத்து படி கூடுதலாகவே ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மஹிந்த குடும்பத்தில் ஒருவராகவே அவர் செயற்படுகின்றார். தொடர்ந்தும் செயற்பட போவதாக கருத்துக்கள் நிலவுகின்றது எதிர் கட்சிகளாலும் முன்வைக்கப்படுகின்றது. அதாவது மஹிந்த குடும்பத்தை இந்த அரசியல் பிரச்சனைகளில் இருந்து பாதுகாப்பதற்காவே அவர் இவ்வாறு செயற்படுகின்றார் என்ற கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

பதில் : அதுவும் இருக்கலாம் ஏனென்று சொன்னால் அதனை மறுத்து வைக்க வேண்டிய தேவை எனக்கில்லை. ஆனால் ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அதுவும் தேசிய பட்டியல் வந்து அவரை அவசர அவசரமாக கோட்டபாயராஜபக்ஷ அவர்கள் பிரதமராக்கி கோட்டபாய சென்றதற்கு பிறகு இன்று பாராளுமன்றத்திற்குள் கூடுதலான ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் வாக்குகளினால் பாராளுமன்ற உறுப்பினர்களினால் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அவர் இன்று பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களிலே தங்கி இருக்கின்றார்.

அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக கடந்த முறை பிரதிசாபாநாயகர் தெரிவின் போது ரணில் விக்கிரம சிங்க விரும்பினார் ஒரு பெண் பாராளுமன்ற உறுப்பினரை பிரதிசாபாநாயகராக கொண்டு வர வேண்டும் என்று ஆனால் அவரது அந்த எண்ணத்தை மீறி ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவினால் அவர்களது உறுப்பினர்களில் ஒருவரான அஜித் ராஜபக்ச ஆனால் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர் அல்ல அவரைக்கொண்டு வந்திருக்கின்றார்கள். அதில் உண்மை இருக்கலாம் ராஜபக்ஷ குடும்பத்தை காப்பாற்றுவதற்காக தான் அவருடன் ராஜபக்ச குடும்பத்தினர் பேசி கொண்டுவந்திருப்பதாக இல்லாமல் இருக்காது உண்மை இருக்கலாம் தான் இருந்தாலும் அவர் இன்னுமொரு வழியை செய்வார் என்று எதிர்பார்க்கின்றேன். கடந்த பாராளுமன்ற தேர்தலிலே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூட வெல்ல முடியாது இருந்த ஐக்கிய தேசிய கட்சியை எப்படியாவது வளத்தெடுத்து சஜித் பிரேமதாசவுடன் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை வளைத்து போட்டு ஐக்கிய தேசிய கட்சியை வளர்ப்பதற்கான முயற்சியையும் அவர் மேற்கொள்ளுவார் என்பது என்னுடைய எண்ணம்.

**கேள்வி: தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு அதாவது த.தே.கூட்டமைப்புக்குள்ளே உள் கட்சி பிரச்சனைகள் இருப்பதாக கூறப்படுகின்றது. நீங்களும் அண்மையில் ஒரு காணொலியை வெளியிட்டிருந்தீர்கள் அதாவது சாணக்கியன் சுமந்திரன் போன்றவர்கள் இவ்வாறு நடந்து கொள்கின்ற விதங்கள் அல்லது இரட்டை வேடங்கள் போடுவது தொடர்பாகவும் அதிலே குறிப்பிட்டிருந்தீர்கள் இந்த அடிப்படையிலே தமிழ் மக்களுக்காக இருக்க கூடிய இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பானது அதாவது ஒரு ஒத்த கருத்து இல்லாத நிலைப்பாட்டிலே இந்த த.தே.கூட்டமைப்பையும் துண்டு துண்டுகளாக உடைப்பதற்கு இந்த ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் இணைந்து சுமந்திரன் சாணக்கியன் போன்றோர் செயற்படுகின்றார்கள் என்ற கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

பதில் : ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் இணைந்து த.தே.கூட்டமைப்பை உடைப்பது என்பது அது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் நான் அதிலே ஒரு காணொலியை வெளியிட்டது. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 10பேரில் 8 பேர்கள் அன்று சந்தித்திருந்தோம். அங்கு நடைபெற்ற சம்பாசனைகளை வெளியிலே வந்து சுமந்திரன் ஒரு விதமாகவும் சாணக்கியன் ஒரு விதமாகவும் கூறியதை தான் நான் அதனை தெளிவுபடுத்தி முகநூல் ஊடாக மக்களுக்கு தெரியப்படுத்தி இருந்தேன் ஏனென்றால் அங்கு நடந்த ஒரு விடயம் சுமந்திரனால் வெளிக்கொண்டுவரப்பட்டிருந்தது

சரியான முறையிலே அதை தம்பி சாணக்கியன் அவர்கள் சக்தி டிவி. நியுஸ் லைன். போன்றவற்றுக்கு பொய்யாக ஒரு விடயத்தை கூறியிருந்தார். அதை நான் தெளிவுபடுத்தினேனே தவிர மற்றும் படி த.தே.கூட்டமைப்பை உடைப்பதற்கோ ரணிலுடன் இவர்கள் சேர்ந்து செயற்படுகின்றார்களோ என்றோ த.தே.கூட்டமைப்பை யாரும் உடைக்க முடியும் என்றோ நான் குறிப்பிடவில்லை. ஆனால் த.தே.கூட்டைப்புக்குள் மூன்று கட்சிகள் இருக்கின்றது. 10பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றோம். இவர்களுக்குள் ஒற்றுமை இருப்பதாக எனக்குத்தெரியவில்லை. இவர்களுக்குள் ஒற்றுமை இல்லை நான் உட்பட த.தே.கூட்டமைப்புக்குள் ஒற்றுமை சிறிதளவேனும் இல்லாமல் தான் இருக்கின்றது. ஏனென்றால் ஒரு சிலரின் தன்னிச்சையான நடவடிக்கைகள் அந்த ஒற்றுமையை சீர்குலைக்கின்றது.

ஏனென்றால் ஒரு விடயங்கள் அரசியல் ரீதியான விடயங்கள் நடைபெறும் போது அது ஆர்பாட்டங்களாகவும் இருக்கலாம். பேச்சுவார்த்தையாகவும் இருக்கலாம். அல்லது அறிக்கைளாகவும் இருக்கலாம். கூட்டமைப்பு தமிழ் மக்கள் சார்ந்து ஒரு தீர்மானங்கள் எடுக்கும் போது ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடனோ அல்லது த.தே.கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுவுடனோ கதைக்காமல் தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதில் தான் த.தே.கூட்டமைப்புக்குள் ஒற்றுமை இல்லை முரண்பாடுகள் இருக்கின்றது. 10பாராளுமன்ற உறுப்பினர்களையும் எடுத்துக்கொண்டாள் அவர்களுக்குள் முரண்பாடுகள் இருப்பதாக தான் எனக்கு தோன்றுகின்றது. எதிர் காலத்திலே இதனை சீர்செய்ய வேண்டுமானால் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு கட்டமைப்பு கட்டாயம் தேவைப்படுகின்றது. ஒரு நிர்வாகம் கட்டாயம் தேவைப்படுகின்றது. இது ஒரு தேர்தல் கூட்டாக மாத்திரம் தேர்தலுக்காக மாத்திரம் த.தே.கூட்டமைப்பு இருக்காமல் ஒரு தமிழ் மக்களின் ஏகோபத்திய அரசியல் குழுவாக த.தே.கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களும் முன்வந்து ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தி பதிவு செய்தால் இப்படியான பிரச்சனைகள் எதிர்காலத்திலே ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் குறைவாக இருக்கும்.

**கேள்வி : தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்க கூடிய ரெலோ அந்த கட்சியில் இருந்து வெளியேறினால் நாங்கள் சந்தோசப்படுவோம் என்ற கருத்தை வவுனியாவில் வைத்து சுமந்திரன் அவர்கள் தெரிவித்திருந்தார். தந்தை செல்வாவினுடைய நினைவுத்தூபி அந்த இடத்திலே இது வந்து சர்சையான விடயமாக உங்களது தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் சில விடயங்களை குறிப்பிட்டிருந்தார். நான் இதில் ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும் ஆயுததாரிகள், வன்முறையாளர்கள் அவர்களுடன் தொடந்து பயணிக்க முடியாது என்ற கருத்தை அடிக்கடி சொல்லி வருக்கின்றார் இது தொடர்பாக கட்சி தலைவர் தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அவர்களுக்கு தெரியப்படுத்தி இருக்கின்றீர்களா?**

பதில் : மாவை சேனாதிராஜா அவர்களுக்கு அது விடயமாக தெரியும். அந்த விடயம் தொடர்பாக ஒரு கண்டன அறிக்கையை விட்டிருந்தார். சுமந்திரன் பேசியதற்கு எதிராக மாவை சேனாதிராஜா அவர்கள் ஒரு கண்டன அறிக்கை விட்டிருந்தார். த.தே.கூட்டமைப்பின் ஆரம்ப கட்சிகளிலே இன்று வரை தொடர்ச்சியாக பயணித்து கொண்டிருப்பது தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ தான் ரொலோவை வெளியேறச்சொல்லவதோ அல்லது வெளியேறினால் சந்தோசப்படுவார்கள் என்று சொல்வதோ அதை சொல்பவர்க்கு எந்த அதிகாரம் இருக்கின்றது. என்பதை பொறுத்து தான் இருக்கின்றது.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

# தனக்கான நேரத்திற்காக காத்திருக்கினறது சீனா!

அமெரிக்காவின் நாடாளுமன்ற பேச்சாளர் நான்சி பெலொஸ்கியின் தாய்வானுக்கான பயணம் ஆசிய பிராந்தியத்தில் புதியதொரு களமுனையை திறந்துவிடும் என்ற அச்சத்தை ஏற்டுத்தியிருந்த போதும் அதனை சீனா தவிர்த்து விட்டது.

சீனாவின் ஒரு சீனா என்ற கொள்கையை அமெரிக்கா வெளிப்படையாக ஆதரித்த போதும், தாய்வனுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துதல், அதனை உலகளாவிய ரீதியில் அங்கீகரித்தல் போன்ற விடயங்கள் மூலம் சீனாவில் இருந்து பிரித்து அதில் அமெரிக்காவினதும், யப்பானினதும் கூட்டுப்படைத் தளத்தை அமைப்பதே அமெரிக்காவின் நோக்கம்.

அதற்காகவே உயர்மட்ட இராஜதந்திரிகளை அங்கு அனுப்புவதுடன், ஏனைய நாடுகளில் இருந்தும், அமெரிக்காவில் இருந்தும் செல்லும் ராஜதந்திரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் நிதிகளையும் அமெரிக்கா தனது அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக வழங்கி வருகின்றது.

அண்மையில் தாய்வானின் தூதரக அலுவலகம் ஒன்று லுத்துவேனியாவில் திறக்கப்பட்டதையும் அமெரிக்காவே ஊக்குவித்திருந்தது. அதனை சீனா கண்டித்திருந்தது. தற்போது பெலொஸ்கியின் பயணத்தையும் வெள்ளைமாளிகை தனிப்பட்ட பயணம் என கூறினாலும் அதன் பின்னனியில் அமெரிக்கா இருப்பது எல்லோரும் அறிந்ததே. 1997 ஆம் ஆண்டு அன்றைய அமெரிக்காவின் பேச்சாளர் நிவ்ற் ஜின்றிச் இன் பயணத்தின் பின்னர் இடம்பெற்ற அமெரிக்காவின் உயர் மட்டப் பயணம் இதுவாகும். அன்று சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நல்லுறவுகள் இருந்தால் அது அதிக எதிர்ப்பை எதிர்கொள்ளவில்லை. ஆனால் தற்போதைய பயணம் என்பது சீனா எமது எதிரி என நேட்டோவின் தலைவர் ஸ்ரோலென்பேர் வெளிப்படையாக தெரிவித்தபின்னர் இடம்பெற்ற பயணம்.

இந்த பயணம் தொடர்பில் சீனா தனது கடுமையான எதிர்ப்புக்களை காண்பித்திருந்தது. சீனாவின் வெளிவிவகாரத்துறை கடும் எச்சரிக்கையை விடுத்ததுடன், சீனாவின் CV-17 Shandong, CV-16 Liaoning ஆகிய இரண்டு விமானந்தாங்கி கப்பல்களும் தாய்வனை நோக்கி நகர்த்தப்பட்டிருந்தன.

தாய்வானை சுற்றிய வான்பரப்பில் சீனாவின் வான் தாக்குதல் விமானமான எஸ்யூ-35 மற்றும் ஜே-16 விமானங்களும், ஐந்தாம் தலைமுறை விமானமான ஜே-20 விமானமும் களமிறக்கப்பட்டிருந்தன.

தாய்வானுக்கு எதிரேயுள்ள சீனாவின் தென்கிழக்கு கடற்கரையான சியாமென், புஜியன் கடற்பகுதியை நோக்கி சீனா தனது எச்-கியூ-22 என்ற வான் எதிர்ப்பு தொகுதியையும், டி.எப்-16 எனப்படும் கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும், பெருமளவான டாங்கிகளையும், ZBL-09 ரக துருப்புக்காவி வாகனங்களையும் நகர்த்தியிருந்தது.

அதேசமயம் தாய்வானின் அரச தலைவர் செயலகத்தின் இணையத்தளம் உட்பட அரச இணையத்தளங்கள் பல சைபர் தாக்குதல் மூலம் செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தன.




தாய்வானும் பெலொஸ்கியின் விமானத்தை பாதுகாப்பதற்காக தனது பிரான்ஸ் தயாரிப்பான மிராஜ்-2000 விமானத்தை வானில் இறக்கியதுடன், விமான எதிர்ப்பு பிரங்கிகளையும் விமான நிலையத்தை சுற்றி நிறுத்தியிருந்தது.

அமெரிக்காவும் றொனால்ட் றீகன் என்ற விமானம் தாங்கி கப்பல் தலைமையில் 4 தாக்குதல் கப்பல்களையும், அதில் எப்-18 ரக விமானங்களையும் தென்சீனக் கடலை நோக்கி நகர்த்தியிருந்தது. அது மட்டுமல்லாது யப்பானில் உள்ள அமெரிக்க தளத்தில் இருந்து 5 இற்கு மேற்பட்ட வானில் வைத்து விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் விமானங்களையும் அனுப்பியிருந்தது. அமெரிக்காவின் இரண்டு Beech King Air 360 கண்காணிப்பு விமானங்களும் தாய்வானில் இறங்கியிருந்தன.

இதனிடையே, அமெரிக்காவின் இந்த நடவடிக்கை தமக்கும் உக்ரைன் மக்களின் நிலையை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தை தாய்வான் மக்களுக்கு ஏற்படுத்தியதால் பலர் பெலொஸ்கியின் பயணத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கி போராடியிருந்தனர். அதேசமயம் விமான நிலையத்திற்கும் வெடிகுண்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன், தாய்வான் தனது நாட்டின் பாதுகாப்பு நிலையை தாக்குதல் எச்சரிக்கைக்கு உயர்த்தியிருந்தது.

இந்த சம்பவங்கள் ஆசியபிராந்தியத்தில் ஒரு போர் இரு பெரும் வல்லரசுகளுக்கிடையில் ஏற்படலாம் என்ற அச்சத்தை தோற்றுவித்திருந்ததுடன், பெலன்ஸ்கியின் விமானத்தின் நடமாட்டத்தை 9 இலட்ச்சத்திற்கு மேற்பட்டவர்கள் தொடர்ந்து அவதானித்துக்கொண்டும் இருந்தனர். எனினும் என்ன நோக்கத்திற்காக அமெரிக்கா பெலொஸ்கியை ஏவியதோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற சீனா அனுமதிக்கவில்லை. அமெரிக்காவின் நோக்கம் என்பது சீனாவில் இருந்து தாய்வனை பிரிப்பது இல்லையெனில் சீனாவை ஒரு வலிந்தபோருக்கு இழுத்து அதன் பொருளாதாரத்தை சீரழித்துவிடுவது.

எனவே தான் முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா காலத்தில் கிழக்கு ஆசிய நாடுகளில் படைத்தளங்கள் அமைப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. பின்னர் டொனால்ட் ரம்பின் காலத்தில் சீனா மீது வர்த்தகப் போர் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. தற்பேது பைடனின் காலத்தில் ஒரு சீனா கொள்கையை முற்றாக இல்லாது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அமெரிக்கா ஏன் போரை தூண்டுகின்றது?**

உக்ரைன் விவகாரம் அமெரிக்காவினதும், ஐரோப்பாவினதும் பொருளாதாரத்தை முற்றாக வீழ்ச்சியடையும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. எனவே அதை கைவிடவேண்டிய நிலை மேற்குலகத்திற்கு ஏற்பட்டுள்ளது. அதனால் தான் ஐரோப்பிய ஒன்றியம் வழங்க தீர்மானித்த 8 பில்லியன் டொலர் கடன் உதவியையும் ஜேர்மனி நிறுத்திவிட்டதாக செலன்ஸ்கி குற்றம் சுமத்தியுள்ளார்.

அதாவது தமது நாடுகளில் ஏற்பட்டுள்ள பணவீக்கம், மற்றும் உக்ரைன் போரை திசைதிருப்பும் முயற்சியாகவே அமெரிக்கா இதனை மேற்கொண்டுள்ளதாக ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் லாரோவ் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்லாது, முன்னாள் அமெரிக்க அதிபர் நிக்சனும், வெளிவிவகாரச் செயலாளர் கெசிங்கரும் பொதுவுடமை கொள்கையுள்ள சீனாவை ஏற்றுக்கொண்டதும், சீனாவை மிகவும் குறைந்த ஊதியம் பெறும் பணியாளர்களாக பயன்படுத்த நினைத்ததும் தான் தற்போதைய நிலைக்கான காரணம். அதாவது உற்பத்தித்துறையை சீனாவிடம் வழங்கிவிட்டு, சேவைகள் துறையை தாம் வைத்திருக்க நினைத்தது கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், அமெரிக்காவின் பொருளாதாரம் போர் சார்ந்ததாக மாற்றம் பெற்றுவிட்டது.

போரை நடத்துவது, ஆயுதங்களை விற்பனை செய்வதே பிரதானமாக மாற்றம் பெற்றுள்ளது. எனவே தான் அமெரிக்காவுக்கு போர் தேவையாக உள்ளதுடன், தனது நாட்டிலும் துாப்பாக்கி விற்பனையை ஊக்குவிக்கின்றது.

90 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்ட பெலொஸ்கியின் பயணத்தின் மூலம் அமெரிக்கா எதனை சாதித்தது?

ஆசிய பிராந்தியத்தில் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது, அது மட்டுமல்லாது தாய்வான மீண்டும் சீனாவுடன் இணைப்பது வரலாற்றின் கடமை என்பதை இந்த பயணம் தமக்கு உணர்த்தியுள்ளதாக சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி தெரிவித்துள்ளார்.

அதாவது அமெரிக்கா எதிர்பார்த்த போர் எற்பட்டு சீனாவின் பொருளாதாரம் அழியவில்லை மாறாக தாய்வான் மீதான சீனாவின் பிடி இறுக்கமையவுள்ளது. அதாவது பெலொஸ்கியின் பயணத்தின் பின்னர் தான் கடும் பின்விளைவுகள் ஏற்படும் என வொசிங்டன் போஸ்ட் தெரிவித்திருந்தது.

அமெரிக்காவின் நாடாளுமன்ற பேச்சாளர் நான்சி பெலொஸ்கியின் தாய்வானுக்கான பயணம் ஆசிய பிராந்தியத்தில் புதியதொரு களமுனையை திறந்துவிடும் என்ற அச்சத்தை ஏற்டுத்தியிருந்தபோதும் அதனை சீனா தவிர்த்துவிட்டது.

அதற்கு அமைவாக தாய்வான் மீது மட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை விதித்துள்ள சீனா, ஆறு முனைகளில் தாய்வானை சுற்றிவளைத்து மிகப்பெரும் படைத்துறை ஒத்திகை ஒன்றை ஆரம்பித்துள்ளது. 9 H-9K போன்ற நீண்டதூர குண்டுவீச்சு விமானங்களும் (இந்த விமானங்கள் தாய்வானின் எப்-16 இல் இருந்து ஏவப்படும் AIM-120 air to air missiles ஏவுகணைகளை விட வேகமாக பறக்கக்கூடியவை.), துருப்புக்காவி வாகனங்களை ஏற்றிய தரையிறங்கு கலங்களும் பங்குபற்றுவதுடன், ஏவுகணைகளும் தாய்வானுக்கு மேலால் ஏவப்படுகின்றன.

அதாவது தாய்வான் மீது சீனா தனது படையினரின் அழுத்தத்தை அதிகரிக்கப்போகின்றது. உக்ரைன் மீதான படை நடவடிக்கைக்கு முன்னர் ரஸ்யா மேற்கொண்ட படை ஒத்திகை ஒன்றைபோல சீனா தற்போது ஆரம்பித்துள்ளது. இந்த ஒத்திகை பின்னர் நிஜமாக மாறும் என தெரிவித்துள்ளார். சீனாவை தளமாகக் கொண்ட படைத்துறை ஆய்வாளர் சொங் சொங்ன்பிங்.

அதாவது **உண்மையான படைத்துறை வியூகம் என்பது எதிரி வகுக்கும் நிகழ்ச்சி நிரலுக்குள் வீழ்ந்துவிடுவதில்லை** என்பதை சீனா தெளிவுபடுத்தியுள்ளது. அது தன்னை தயார்படுத்தியவாறு தனக்கான நேரத்திற்கு காத்திருக்கின்றது.



**வேல்ஸ் இல் இருந்து அருஸ்**

# பூகோள அரசியலுக்குள் காய்நகர்த்தப்படும் இலங்கை பொருளாதாரம்

**ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல**

**கேள்வி :- இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குமத்தியில் தற்போது சீனா, இந்தியா போன்ற நாடுகள் இலங்கைக்குள் பூகோள ரீதியான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன. இலங்கையின் கடற்பரப்பிற்குள் இவ்விரு நாடுகளின் கப்பல் மற்றும் விமானங்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. அண்மையில் சீனக் கப்பல் இலங்கை வந்துள்ளது. இந்தியா விமானமொன்றை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இவ்விடயங்களை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**



புதில் :- இலங்கை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கிறது. அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தத்தமது ஆதிக்கத்தை வைத்திருக்க வேண்டும் என விரும்புகின்றன. அந்தப்போக்கைத்தான் நாம் காண்கிறோம். சீனாவின் சில திட்டங்களுக்கு இலங்கையினது அமைவிடம் முக்கியமானதாக இருக்கின்றது. சீனா தனது தேவைக்காக இன்று இலங்கையை பயன்படுத்துகிறது. இந்தியா என்பது இலங்கைக்கு மிக அருகில் உள்ள ஒரு நாடாகும். தலைமன்னாரிலிருந்து பார்த்தால் மிகக் குறுகிய தூரமே இவ்விரு நாடுகளுக்குமிடையிலான இடைவெளி. இலங்கை தனிநாடாக இருந்தாலும் இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள் உள்ள ஒரு நாடே. இலங்கை எடுக்கக்கூடிய கொள்கைகளில் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் வரக்கூடாது என்பது யதார்த்தபூர்வமான விடயம்.

யுத்த நேரத்தில் இலங்கை சீனாவிடமிருந்து பெருந்தொகையான கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. கடன் என்று கூறுகின்றபோது பணம் என்பதையும் விட போர் விமானங்கள், ஆயுத தளபாடங்கள் உள்ளடங்குகின்றன. யுத்தம் சம்பந்தமான பொருட்களே இதில் அடங்கும். அதனைவிட ஹம்பாந்தோட்டை துறைமுகம் என்பது இலங்கைக்குத் தேவையற்ற துறைமுகமாக, சீனாவே அதனை அமைத்து மீண்டும் அத்துறைமுகத்தை சீனாவுக்கே இலங்கை கொடுக்குமளவிற்கு நிலைமை வந்துள்ளது. ஆகவே 99 வருடக் குத்தகைக்கு அந்தந் துறைமுகம் சீனாவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது இந்தியாவுக்கு ஏற்புடைய விடயமாக இருக்காது என்பதை இலங்கை புரிந்துகொண்டிருக்கவேண்டும். இலங்கை அதனைக் கவனத்திற்கொள்ளாது சீனாவுக்கு கொடுத்தமையானது இலங்கை தானாகவே பலமிழந்து கொண்டிருக்கிறது என்பது தான் எனது நிலைப்பாடு.

இதனைவிட சீனாவிடமிருந்து இலங்கை பெற்றுள்ள மொத்தக் கடன் 10 விகிதம் எனக் கூறுகிறார்கள். ஏறத்தாழ 97 பில்லியன் கடன்களை இலங்கை வெளிநாடுகளுக்குச் செலுத்தவேண்டி உள்ளதாக கூறுகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவழைத்திருக்கக்கூடிய பிரெஞ்ச் நாட்டின் குழுவினர் தான் இலங்கை செலுத்தவேண்டிய கடன்களுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுக்கும் நிபுணர்களாக செயற்பட்டு வருகின்றார்கள். இலங்கை அரசாங்கம் அந்தளவு கடன்களைப் பெற்றதும் அந்தக் கடனை இப்பொழுது திருப்பிக் கொடுக்க முடியாமல் இருப்பதும் அதற்கு கால அவகாசம் தேவை என்கிற நிலையும் அதனை சீனாவிடம் பேசவேண்டுமாகவிருந்தால் சீனாவின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கூறிய அழுத்தம் இலங்கைக்கு இருக்கிறது. இலங்கை சீனாவின் தேவைகளை நிறைவேற்றவேண்டும் அதேசமயம் இந்தியாவினுடைய பாதுகாப்பில் கரிசனை கொள்ளவேண்டிய தேவையும் இருக்கிறது.

எது எப்படி இருந்தாலும் இலங்கை இந்தியாவினுடைய பாதுகாப்பு விடயத்திற்கு அப்பாற்சென்று தனக்கு வேறு வழியில்லை என்கின்ற காரணத்தினால் சீனாவினுடைய உளவுக்கப்பல் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் வந்து தரித்துநின்று அது தனது வேலைகளைச் செய்கிறது. என்ன வேலை செய்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தான் தெரியும். இந்தக் கப்பலின் வருகையை இந்தியா விரும்பவில்லை. அதனை இந்தியா இலங்கைக்குக் கூறியிருந்தது. அமெரிக்காவும் விரும்பாமல் இலங்கையிடம் கூறியிருந்தது. அமெரிக்கா மற்றும் சீனாவினுடைய ஊடுறுவல் என்பது இந்தப் பகுதியினுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயம் என்பது இந்தியாவினுடைய கணிப்பு. அது மட்டுமல்லாமல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லரசு நாடாக இந்தியா இருந்துகொண்டிருப்பதும் 130 கோடி மக்களைக் கொண்ட மிகவும் வளர்ச்சியடைந்த நாடு என்கின்ற அடிப்படையில் அது தன்னுடைய பாதுகாப்பு பொருளாதாரம் வளர்ச்சி போன்றவற்றில் அக்கறைகொண்டிருக்கும் என்பதுவும் ஒரு குறிக்கப்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட சிறிய தீவான நாங்கள் 130 கோடி மக்களைக் கொண்ட நாடு என்கிற போது இவ்விரு நாடுகளுக்கிடையிலான வித்தியாசங்களைப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆகவே அமெரிக்கா இந்தியா.சீனா ஆகிய நாடுகள் இலங்கையில் தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு இலங்கை என்பது அவர்களுக்கு முக்கியமானதொன்றாக இருக்கின்றது. இலங்கையினது கேந்திர முக்கியத்துவம் என்பது எல்லோராலும் புரியப்பட்டதொன்றாகவிருக்கின்றது. ஆனால் இலங்கை எதிர்காலத்தில் இந்த விடயங்களை எவ்வாறு கையாளப்போகின்றது என்றவொரு பிரச்சினை தொடர்ந்தும் இருக்கிறது. தற்போதைய ஜனாதிபதி அவருடைய கடந்தகால போலி கொள்கைகள் என்பது பலருடைய கூற்றுக்களில் இருந்து நாங்கள் அறியக்கூடியதாகவிருக்கின்றது. நாங்கள் செய்கின்றோம் என பல விடயங்களை செய்யாமல் இருந்திருக்கின்றார்கள். செய்வார்கள் என எதிர்பார்த்த பல விடயங்களை செய்யாமல் விட்டது என்பது அமெரிக்கா மற்றும் இந்தியாவிற்கு இவர்கள் மீது நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

முன்னொரு காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளின் செல்லப்பிள்ளை என்கிற பெயர் தற்போது இல்லாமல் போயிருக்கிறது. கோட்டாபய ராஜபக்ஷவின் அரசில் இருந்து அல்லது யுத்தம் நடைபெற்ற காலத்திலிருந்து இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் பேசி எடுத்த முடிவுகளைக் கைவிட்டதும் தங்களுடைய தேவை கருதி சீனா போன்ற நாடுகளுடன் மிக நெருக்கமான உறவுகளை வளர்த்தது மாத்திரமல்லாமல் அவர்களுக்கு இலங்கையில் இடம்கொடுத்திருந்தனர்.

தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினையை தீர்க்க முடியாத இலங்கை அரசாங்கம் இப்பொழுது நாட்டினுடைய பல பகுதிகளை வெளிநாடுகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறோம். ஹம்பாந்தோட்டை மற்றும் போர்ட் சிற்றியை கொடுத்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான சீனர்கள் இங்கு வந்து தொழில் செய்கிறார்கள். அவர்கள் கேட்கின்ற அனைத்தையும் செய்யக்கூடிய இலங்கை அரசாங்கம் என்பது தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு இந்த நாட்டில் அவர்களையும் ஒரு சமத்துவமான குடிமக்களாக வைத்திருப்பதற்கு இன்னும் தயங்குகிறார்கள்.

ஆகவே நாட்டின் இறையாண்மை என்பதை ஏதோவொரு வகையில் இவர்கள் வெளிநாடுகளுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மையான விடயம். இந்த நிலையிலிருந்து இவர்கள் மாற்றம் பெற வேண்டுமாகவிருந்தால் இவர்களது சிந்தனை, உளவியல் எவ்வாறு இந்த விடயங்களைக் கையாள வேண்டும் என்பதில் பல்வேறுபட்ட மாற்றங்கள் தேவை என நான் கருதுகின்றேன்.

**கேள்வி : தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினுடைய நிலைப்பாடு பூச்சியத்திலிருந்து அவர் ஆரம்பித்திருக்கின்றார். தமிழ் மக்களது போராட்டத்தை மழுங்கடிக்கும் சூத்திரதாரியாக செயற்பட்டவரும் ரணில் அவர்கள் தான். தமிழ்க் தரப்பு இன்றைய அரசியல் நிலைப்பாட்டை தமக்குச் சாதகமாக பயன்படுத்தி தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற எவ்வாறான வேலைத்திட்டங்களைச் செய்யமுடியும்?**

பதில் : இப்பொழுது நாடு எதிர்நோக்கியிருக்கக்கூடிய பிரச்சினை என்பது பாரதூரமான பொருளாதாரப் பிரச்சினை. நாடு வங்குரோத்து நிலைக்குப் போயிருக்கிறது. எமது நாடு ஒரு தோல்வியடைந்த நாடாக மாறியிருக்கிறது. பொருளாதாரம் என்பது அதளபாதாளத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. வாழ்க்கைச் செலவுகள் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. இறக்குமதிகள் அதிகரித்தும் ஏற்றுமதி மிகச் சொற்பமாக மாறியிருக்கிறது. அந்நியச் செலாவணி என்பது கையிருப்பில் இல்லை. நாங்கள் நான்கு பக்கமும் கடன் பெறும் நபர்களாக இருக்கிறோம் என்பதே இன்றைய நிலவரம்.

இந்த சூழ்நிலையை எவ்வாறு கையாண்டால் இலங்கை அரசாங்கத்திடமிருந்து தமிழ் மக்களது நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். முதலாவது நாம் சமஷ்டி பற்றிப் பேசுகின்றோம். இணைப்பு ஆட்சி பற்றி அல்லது சுயாட்சி குறித்துப் பேசுகின்றோம். இரு தேசம் ஒரு நாடு குறித்துப் பேசுகின்றோம். அப்படியான விடயம் நிறைவேறவேண்டுமாகவிருந்தால் இந்திய அரசியல் சாசனம் என்பது முக்கியம். அவ்வாறான மாற்றங்களைக் கொண்டுவர தற்போதைய ஜனாதிபதி அரசியல் சாசனத்தில் மாற்றங்களைக் கொண்டுவர தயாராக இருக்கின்றாரா. அது இயலுமா. அவர் தற்போது புதிய அரசியலமைப்பு குறித்துப் பேசுகின்றார். முன்னர் அவர் இருந்த ரணில் - மைத்திரி கூட்டு அரசிலும் புதிய அரசியலமைப்பு குறித்து பேசப்பட்டது. பின்னர் எதுவும் இல்லாமல் போனது. பிரதமராக ரணில் அவர்கள் இருந்த போது மேற் சொன்ன விடயங்களை அவர்களால் செய்ய முடியவில்லை. அவர் தற்போது எதுவுமே இல்லாமல் ஒரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக உள்ளே நுழைந்தவர். மக்களது போராட்டத்தின் காரணமாக பிரதமர் வாய்ப்பு அவருக்கு வந்தது. பின்னர் பொதுஜன முன்னணியின் உபயத்தில் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெற்று தற்போது ஆட்சியிலிருக்கிறார். ஜனாதிபதி விரும்புவனவற்றை பொதுஜன முன்னணி ஏற்றுக்கொள்ளுமா என்கிற கேள்வி இருக்கிறது. சிங்கள பௌத்த வாக்குகளால் வந்தவர்கள் தான் இவர்கள். பிரதமராக இருக்கும் தினேஷ் குணவர்த்தன என்பவர் ஒரு இனவாதி. அவர் தமிழ் மக்களுக்கான நலன்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் மாட்டார். உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றோர் மிகப்பெரிய இனவாதிகள். தற்போதைய அரசிடமும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன்களைப் பெறுவது பற்றியே கரிசனை இருக்கிறது. வெளிநாட்டு நாணயங்கள் இலங்கைக்குத் தேவையாக இருந்தால் முதலீடுகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் டயஸ்போராக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தான் முதலீடுகளைக் கொண்டுவர வேண்டும். தமிழகத்திலும் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் இந்த அரசுகளை நம்பி முதலீடுகளைக் கொண்டுவர மாட்டார்கள். தமிழ் மக்களது அரசியல் தீர்வு மற்றும் தத்தமது பாதுகாப்பு விடயங்கள் இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. எமது கைவசம் இருப்பது மாகாண சபைகள் தான்.

ஆகவே மாகாணசபைகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு வெளிநாட்டு முதலீடுகளை உள்வாங்குவதற்கான அதிகாரம். அவற்றைப் பாதுகாப்பதற்கான அதிகாரம். சலுகைகளை வழங்குவதற்கான அதிகாரம். வரிகளை வசூலிக்கும் அதிகாரம் என்பன குறைந்தபட்சமாவது மாகாண சபைகளுக்கு வழங்கப்படுமாகவிருந்தால். புலம்பெயர் முதலீடுகளைக் கொண்டுவர அதிகாரம் இருக்கவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் இதன் ஊடாக வடமாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் அதன் ஊடான வேலைவாய்ப்புக்களை நாம் கொண்டுவர முடியும். வடகிழக்கினைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்கின்ற போது நாட்டைவிட்டுப் புலம்பெயர்வதற்கான வாய்ப்புக்கள் குறையும். இவ்வாறான அபிவிருத்திகள் ஊடாக நாம் ஏற்றுமதியினை அதிகரிக்கலாம். வெளிநாட்டுக் கடன்களை அடைக்கலாம். அந்நிய செலாவணி அதிகரிக்கும். இவ்வாறான அதிகாரங்கள் மாகாண சபைக்கு கிடைக்கின்ற போது மாகாண சபை பலமான நிறுவனமாக மாறும். இதன் ஊடாக நாங்கள் வடகிழக்கினை அபிவிருத்தி செய்ய முடியும். எங்களது கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலமாகவும் இவ்வாறான அதிகாரங்களைப் பெற்று மாகாண சபையினை நிறுவினால் தமிழ் மக்களது இருப்பு பாதுகாக்கப்படும்.

**நேர்காணல் : இரணியன்**

# தமிழ் தேசிய பரப்பில் சீன இந்திய வல்லாதிக்கம் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொன்று

இலங்கையில் தற்போது பொருளாதார நெருக்கடியானது தீவிரம் பெற்று வருகின்றது. இந்த பொருளாதார நெருக்கடியை வெறுமனே சிங்கள தேசம் மட்டும் எதிர்கொள்ளும் நெருக்கடியாக நோக்கமுடியாது. இந்த நெருக்கடியானது தமிழர் தாயகம் உட்பட முழு இலங்கைக்குமான நெருக்கடியாகவே பார்க்கப்பட வேண்டும்.

இலங்கையில் அரசியல் நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தினை மீட்கமுடியும் என்று நம்பியவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளதை காணமுடிகின்றது. புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதும், மேற்கு நாடுகளும் அமைப்புகளும் அதற்காகவே காத்திருந்தவை மாதிரி, வரவேற்று கருத்துகளை வெளியிட்டிருந்தன. குறிப்பாக, இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சீர்செய்வதற்கு, புதிய பிரதமருக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறின.

அரசாங்கத்தை பொறுப்பெடுத்து, நாட்டைச் சீராக்குவது தான் தன்னுடைய முதல் பணி என்று கூறிக் கொண்டு பதவிக்கு வந்த ரணிலுக்கு, ராஜபக்சக்களோடும் அவர்களின் ஆதரவுத் தரப்புகளோடும் வேலை செய்வது, எவ்வளவு சிக்கலானது என்று புரியத் தொடங்கி விட்டது. நாட்டு மக்கள் பாரிய நெருக்கடியை எதிர் கொண்டிருக்கின்ற நிலையில், அது குறித்து எந்தவித விவாதத்தையும் நடத்தாமல், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள், தங்களது எரிந்த வீடுகள் பற்றி மணிக் கணக்கில் பேசிக் கொண்டார்கள்.

அதுபோல, வீடுகளை இழந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, அரச செலவில் புதிய அடக்குமாடி குடியிருப்புகளை நிர்மாணிப்பது தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பேசியிருக்கின்றார். நாட்டில் சமையல் எரிவாயு, எரிபொருள், மருந்துப் பொருட்கள் தொடங்கி அத்தியாவசியமான அனைத்துக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது, புதிய பிரதமர் கூட அது பற்றி பிரஸ்தாபிக்கின்றார்.

ஆனால், அது தொடர்பில் எந்தவித அக்கறையாவது பாராளுமன்றத்துக்குள் ஆளும் தரப்பில் உள்ள உறுப்பினர்களுக்கு இல்லை. மாறாக, மக்களின் போராட்டங்களைப் புறந்தள்ளிக் கொண்டு, கடந்த காலத்தில் ராஜபக்ச யுகத்தில் தாங்கள் செயற்பட்டது மாதிரியே, மீண்டும் செயற்படுவோம் என்கிற நிலையில் இருக்கின்றார்கள்.

மக்கள் வீதிகளில் அத்தியாவசிய பொருட்களுக்காக அலைவது குறித்தோ, அவர்களின் பட்டினி குறித்தோ எந்தவித சிந்தனையையும் பாராளுமன்றத்துக்குள் ஆளும் தரப்பில் உள்ள உறுப்பினர்கள் வெளிப்படுத்துகிறார்கள் இல்லை. இதனால், ரணிலின் புதிய அரசாங்கமும்கூட, ராஜபக்சக்களின் பாரம்பரிய ஆட்சி அதிகார கட்டமைப்பின் நீட்சியாகவே இருக்கின்றது.



இந்தநிலையில் இலங்கையின் பொருளாதார நிலைமையினை சீர்செய்வதற்கான மூலகாரணங்களை கண்டறிவதற்கான முன்னெடுப்புகளை யாரும் முன்னெடுக்க வில்லையென்ற கவலை இன்று நாட்டு தமிழ் மக்களிடம் காணமுடிகின்றது.

இந்த நாட்டில் கடந்த 30வருடகாலமாக தமிழ் மக்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்பட்ட யுத்தமும் அதன் பின்னரான காலப்பகுதியில் பொறுப்புக் கூறலிலிருந்து சிங்கள அரசுகள் விலகியதும் தமிழர்களுக்கான தீர்வினை வழங்காததுமே இன்றைய இந்த பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்ற உண்மையினை ஏற்றுக்கொள்வதற்கு சிங்கள தேசம் தவறிவருகின்றது.

இன்று நாட்டில் ஏற்பாட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு வடகிழக்கினை சேர்ந்த புலம்பெயர் மக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியம் என்பதை ஏற்றுக் கொள்ளும் சிங்கள தேசம், தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்கும் போதே புலம்பெயர் மக்கள் இந்த நாட்டில் தமது முதலீடுகளை செய்யும் நிலையேற்படும் என்பதை ஏற்க மறுக்கும் நிலையே காணப்படுகின்றது.

இந்த நிலையில் அண்மைக்காலமாக வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதியானது சீனா போன்ற நாடுகளின் கவனத்தினை அதிகளவில் ஈர்த்து வருகின்றமை தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

சீனாவினை பொறுத்த வரையில் இலங்கையில் காலூன்றுவதற்கு கடுமையான பிரயத்தனங்களை முன்னெடுத்து வருகின்றது. ஏற்கனவே வடக்கில் காலூன்ற தேவையான தனது நடவடிக்கைகளை முன்னெடுத்த சீனா அதற்கு எதிரான அலைகள் ஏற்பட்டநிலையில் அதனை தொடராத நிலையில் தற்போது கிழக்கு பக்கம் பார்க்கும் நிலையினை காணமுடிகின்றது.

சீனாவின் கிழக்கு மீதான பார்வையினை இன்று தமிழ் தேசியத்தின் பால் உள்ளவர்கள் பெரிதாக எடுத்துக் கொண்டதாக தெரியவில்லை. தமிழ் ஊடகங்களும் சீனாவின் கிழக்கு தொடர்பான கரிசனையினை எழுந்தமானதாகவே பார்க்கின்றது.

பல ஆண்டுகளாக, ராஜபக்சக்களின் மகத்தான திட்டங்கள் மற்றும் தவறாகக் கருதப்படும் ஊதாரித்தனம் ஆகியவற்றால் சீனா மிகப்பெரிய பயனாளியாக இருந்து வருகிறது. பல ஆண்டுகளாக வரவு - செலவுத் திட்ட பற்றாக்குறை மற்றும் நாட்டை இயங்க வைக்க தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சீனாவிடம் இருந்து இலங்கை பெருமளவில் கடன் வாங்கியது.

ஆனால் அது விலையுயர்ந்த மற்றும் சாத்தியமில்லாத விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, நெடுஞ்சாலை, விருந்தோம்பல் மற்றும் பொது நிதிகளை மேலும் பிழிந்தெடுக்கும் அத்தகைய வசதிகளை உருவாக்குவதற்கு பெரும் தொகையை வீணடித்தது. மேலும் கட்டப்பட்டவற்றில் பெரும்பகுதி, பெரும் இழப்பைச் சந்தித்த பிறகும் சீனக் கடன்களுக்குச் சேவை செய்யத் தவறியதாலும் கைவிடப்பட்டது.

இலங்கையின் மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்கும் நாடான சீனா மட்டுமே இதில் வெற்றி பெற்றுள்ளது. பீஜிங்கின் கடன் - பொறி இராஜதந்திரம் மீதான விமர்சனங்களையும் எச்சரிக்கைகளையும் புறக்கணித்து, மூலோபாய ரீதியாக அமைந்துள்ள இந்தியப் பெருங்கடல் தீவு தேசத்தில் பெரிய அளவிலான சீன முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக சீனாவில் நன்கு விரும்பப்பட்ட இலங்கைத் தலைவராக மகிந்த திகழ்ந்தார்.

இவ்வாறான நிலையிலேயே கிழக்கு மாகாணத்தில் சீனா தனது காலை விரிக்கும் நிலையினை காணமுடிகின்றது. அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த சீன தூதுவர் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களுக்கும் விஜயம் செய்ததுடன் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து சென்றுள்ளார். பல இடங்களுக்கு இரகசிய விஜயத்தினையும் மேற்கொண்டு இரகசிய சந்திப்பினையும் மேற் கொண்டுள்ளார். குறிப்பாக கிழக்கு மாகாணத்திற்கு வெளிநாட்டு தூதுவர்கள் விஜயம் செய்யும்போது பாதுகாப்பு என்பது மிகவும் குறைவானதாகவே இருக்கும். ஆனால் சீன தூதுவர் கிழக்கு மாகாணத்திற்கு வருகைதந்த போது இராணுவத் தளபதிக்கு வழங்கப்படும் பாதுகாப்பினை விட அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான பாதுகாப்புடன் கிழக்கு மாகாணத்திற்கு சீனத்தூதுவர் வரவேண்டிய அவசியம் என்ன?

இதுவரையில் கிழக்கு மாகாணத்திற்கு எந்த விஜயமும் மேற்கொள்ளாத சீனத்தூ துவர் நாடு பொருளாதார நிலையில் மிகவும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்த வேளையில் கிழக்கில் எதற்காக காலூன்ற முயற்சிகளை முன்னெடுக்கின்றார்கள் என்கின்ற பல சந்தேகங்கள் எழுகின்றன.

கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த சீன தூதுவர் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்ததுடன் அங்கு தமிழ் நாட்டின் உதவிப்பொருட்கள் வருவதற்கு முன்பாக சீன மக்களின் உதவி என்ற நாமத்துடன் நிவாரணப்பொருள் கொண்ட பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அரசியல் வாதிகளை சந்திக்காது சிவில் அமைப்புகளையும், பொது அமைப்புகளையும், அதிகாரிகளையும் மட்டுமே சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் அதன் போது பல விடயங்கள் குறித்து கேட்டறிந்து கொண்டுள்ளார். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் முதலீடுகளை முன்னெடுப்பதற்கான வளங்கள் அதன் கொள் நிலைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

அத்துடன் பல்வேறு அரசாங்கத்திற்கு சார்பாக செயற்படும் அரசசார்பற்ற அமைப்புகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாகவும் இதன்போது இந்தியாவின் கிழக்கின் பிரசன்னம் குறித்தும் சிவில் சமூக அமைப்புகளுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

பொருளாதார நெருக்கடிகள் சூழ்ந்துள்ள நிலையில் வடகிழக்கிற்கு முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களிடம் அழைப்புகளை விடுத்து வரும் நிலையில், கிழக்கு நோக்கி சீனாவின் பார்வை திரும்பியுள்ளமை பல்வேறு சந்தேகங்களை எழுப்பி வருகின்றது.

வடகிழக்கில் தமிழர்களின் போராட்டத்தினை சிதைப்பதற்கு அனைத்து வழிகளிலும் உதவிய சீன அரசாங்கம் இன்று வடகிழக்கில் தமிழ்தேசியம் சார்ந்த செயற்பாடுகளை கட்டுப்படுத்தி தமிழர்களின் சுயநிர்ணய கோரிக்கையினை வலுவிழக்கச்செய்யும் சூழ்நிலையினை ஏற்படுத்த முனைகின்றதா? அல்லது இந்தியாவின் மீது ஆதிக்கத்தினை செலுத்த வடகிழக்கினை எதிர்காலத்தில் பயன்படுத்த முனைகின்றதா? போன்ற பல்வேறு கேள்விகள் இன்று தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

இவற்றினை எதிர்காலத்தில் தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதை சீனாவின் நடவடிக்கையினை பொறுத்தே தீர்மானிக்க முடியும். எனினும் இது தொடர்பில் தமிழ் தேசிய பரப்பில் செயற்படுவோர் அவதானமாக செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.





# பிராந்திய செய்திகள்



## பொதுமக்களிடம் உதவி கோரியுள்ள பொலிஸார்

அலரி மாளிகைக்குள் பிரவேசித்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர்.

2022.07.09 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இந்த சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட வேண்டும் என கொழும்பு தெற்குப் பிரிவின் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் 0112 421 867, 0763 477 342, 1997 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

## வவுனியாவில் விபச்சார விடுதி முற்றுகை

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் விபச்சார விடுதி ஒன்று பொலிசாரால் நேற்று (19) மதியம் முற்றுகையிடப்பட்டதுடன் இரு பெண்கள் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட் டமையுடன் விடுதியில் இருந்து ரி56 ரக 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி தலைமையில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மற்றும் மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றை முற்றுகையிட்டு சோதனை நடத்தினர்.



இதன்போது குறித்த விடுதியில் தங்கியிருந்த இரு பெண்கள், விடுதி முகாமையாளர் (ஓய்வுபெற்ற இராணுவ வீரர்) மேலும் ஒரு ஆண் உட்பட நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் குறித்த விடுதியில் பொலிசார் சோதனை செய்தால் அங்கிருந்து பெண்கள் தப்பியோடும் வகையில் சுவர் ஒன்றில் சுட்சுமான முறையில் பாதை ஒன்றும் அமைக்கப்பட்டு இருந்தமை பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

மேலும் குறித்த விடுதியில் பொலிசார் சோதனை செய்த போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இயங்கு நிலையில் உள்ள ரி56 ரகத்தினை சேர்ந்த 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த விடுதி ஓய்வுபெற்ற இராணுவ வீரருடையது என்பதுடன் கைது செய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## உழவு இயந்திரம் குடை சாய்ந்தில் மூன்று பெண்கள் பலி

மூதூர் பாச்சனூர் 64 ஆவது கட்டைப் பகுதியில் அமைந்துள்ள கொட்டியாரம் ரஜமஹா விகாரையில் சிரமதான நிகழ்விற்காக சென்ற உழவு இயந்திரம் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் அன்று (20) இடம்பெற்றுள்ளது.

மூதூர் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியிலே இவ்விபத்துச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கந்தளாயில் இருந்து சேருவிலவுக்குச் சென்ற உழவு இயந்திரமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது அதில் 21 பேர் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பத்திற்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளாகி உள்ளதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தோரின் சடலம் மூதூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்துச் சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## நாட்டில் மின்சார பாவனை குறைவு

நாட்டில் மின்சார பாவனை 20 வீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மின்சார பாவனை அதிகமாக உள்ள காலப்பகுதியில் மின்சாரப் பாவனை குறைந்துள்ளதாக அதன் தலைவர் ஜனக ரத்னாயக தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போதைய மின்சார பாவனை 20 வீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளது

நாட்டில் மின்சார பாவனை 20 வீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மின் பாவனையை குறைப்பதற்கு தெளிவான வேலைத்திட்டம் ஒன்று தேவை என இலங்கை மின்சார சபையின் பொறியியல் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சத் இந்துவர தெரிவித்துள்ளார்.

மன்னார் மற்றும் புனரின் ஆகிய பிரதேசங்களில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களை நிறுவ அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் முதலீடு செய்யப்படவுள்ளது.

## அம்பலாங்கொடை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் மூவர் கைது

அம்பலாங்கொடை, உரவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஜூலை 26ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

ஹோமாகம கெமுனு மாவத்தையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த 21 வயதுக்கும் 41 வயதுக்கும் இடைப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பதுங்கியிருந்த வீட்டில் தங்கியிருந்த 64 வயதுடைய பெண் ஒருவரும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி, தோட்டாக்கள் அடங்கிய பை, குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் குற்றத்தை செய்ய பயன்படுத்திய மூன்று கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களை இன்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## போக்குவரத்து விதிகளை மீறும் பாதசாரிகளுக்கு அபராதம்

கொழும்பு, புறக்கோட்டைக்கு வரும் பாதசாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி போக்குவரத்து தலைமையகத்தால் நடைபெற்றது.அங்கு, போக்குவரத்து விதிகளின்படி, பாதசாரிகள் வீதிகளைக் கடக்கிறார்களா என கடுமையாக சோதனை செய்யப்பட்டது.

பல பாதசாரிகள் போக்குவரத்து விதிகளை மீறி, சிவப்பு சமிக்ஞைகள் எரியும் போது சாலையைக் கடப்பதைக் காண முடிந்தது. மேலும் அவர் களுக்கு போக்குவரத்து விதிகள் மற்றும் வீதியைக் கடப்பது குறித்து காவல்துறையினரிடமிருந்து கடுமையான எச்சரிக்கைகள் விடுக்கப் பட்டது.

போக்குவரத்து விதிகளை மீறி வீதிகளைக் கடப்போரின் அடையாள அட்டை மற்றும் பிற விபரங்கள் கணினிமயமாக்கப்பட்டு மீண்டும் போக்குவரத்து விதிகளை மீறுவார்களாயின் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அங்கிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சர்வதேச நாணய நிதியம் எதிர்ப்பார்க்கும் உத்தரவாதம்!

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்றின் இலங்கைக்கான விஜயத்தின் போது கடனாளிகளிடமிருந்து போதிய உத்தரவாதத்தை எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை முகங்கொடுக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க உதவிப் பொதியை அறிமுகப்படுத்துவதற்கான பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நிதியத்தின் பணியாளர்கள் ஒகஸ்ட் மாதம் 24 முதல் 31 வரை இலங்கைக்கு விஜயம் செய்வார்கள் என ரொய்டர்ஸ் செய்தித் சேவை தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வசதிகளை வழங்குவதற்கு, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன் வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் அவசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் பரப்பில் சீனா,இந்தியா – இலங்கையில் நடப்பது என்ன?

இந்தியா ஒரு கப்பலை கொண்டுவந்தாலும் சீனா ஒரு கப்பலைக் கொண்டுவந்தாலும் இலங்கை அரசாங்கத்தால் மறுக்க இயலாது. ஏன் அமெரிக்கா ஒரு கப்பலைக் கொண்டுவந்தாலும் மறுக்க முடியாது. இலங்கையைப் பொறுத்தவரை தங்களுடைய அரசியலும் சரி பொருளாதார ரீதியான செயற்பாடுகளையும் சரி பூகோள ரீதியாக சார்ந்து தான் நீண்டகாலமாக செய்து வருகின்றார்கள். ஆனால் ஒரு நாடு இலங்கைக்குள் தலையீடு செய்கின்ற போது ஏனைய நாடுகள் கண்டனம் தெரிவிக்கும். அதனை இலங்கை தாங்கியே ஆகவேண்டும்.

வர்த்தக ரீதியாக மாத்திரமல்ல கடன் ரீதியாகவும் சர்வதேச நாடுகளையே இவர்கள் நம்பியிருக்கிறார்கள். உலக நாடுகளுடைய அல்லது வளர்ந்த நாடுகளுடைய தயவில் தான் இலங்கை தங்கியிருக்கிறது. ஆகவே அவர்களை கண்டிக்கவோ சுயமாக முடிவெடுக்கவோ இலங்கைக்கு அதிகாரம் இல்லை. ஆகவே பூகோள அரசியலுக்குள் இவர்கள் சிக்குப்பட்டுள்ளார்கள்.

சீனக் கப்பலானது உளவு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. சீனா 99 வருடங்கள் குத்தகைக்கு இலங்கையின் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை எடுத்துவைத்திருந்தால் அதற்குள் அவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை செலுத்துவார்கள். நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியாமல் இருந்தாலும் கூட அவர்கள்மறைமுகமானநடவடிக்கைகளை மேற்கொள்ள இவற்றைப் பயன்படுத்தலாம். அதனை இலங்கை தடுக்க முடியாது.

சீனாவைப் பொறுத்தவரையில் குறித்த கடற்பிராந்தியத்தின் கடல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கிறதால் இந்தியா தனது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறது.

ஆரம்பத்தில் சீனாவுக்கு ஹம்பாந்தோட்டையை வழங்குகின்ற போது இலங்கை கூறிய விடயம் சரக்குக் கப்பல் போன்றவற்றுக்கு மாத்திரம் தான் சீனா ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை பயன்படுத்த முடியும் என்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாது என ஒப்பந்தத்தில் இருக்கிறது. ஆகவே அதனைச் சுட்டிக்காட்டு இந்தியா கேட்கின்றது அவ்வளவுதான். ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து மிகக் குறுகிய தூரத்தில் தான் இந்தியா இருக்கிறது. ஆகவே இந்தியா தனது பாதுகாப்பு விடயத்தில் கரிசணை கொள்வது ஆச்சரியமொன்றுமில்லை.


முன்னாள் வடமாகாணசபை விவசாய அமைச்சர் சிவனேசன் (பாவான்)

சீனக் கப்பலை இலங்கையால் தடுத்து நிறுத்த முடியாது. ஏனென்றால் அந்தளவுக்கு சீனாவிடம் இவர்கள் கடனைப் பெற்றிருக்கிறார்கள். சீனா தனது கப்பலை எனது துறைமுகத்தில் கொண்டு வந்து நிறுத்தப்போவதாகவும் வேறு ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடப்போவதில்லை என்றுதான் சீனா கூறும். ஆனால் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வதை யார் தடுப்பது. யார் கண்காணிப்பது.

இலங்கையினது புலனாய்வுக் கட்டமைப்புக்களுக்கு இதனது விளைவு குறித்து நன்கு தெரியும். ஆனால் வேறு வழியில்லை. சீனாவினது ஆதிக்கம் இலங்கையில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. பல வழிகளிலும் இவர்கள் அவர்களுக்கான அனுமதியைக் கொடுத்திருக்கிறார்கள். ஒப்பந்தங்களைச் செய்திருக்கிறார்கள். ஆகையால் இலங்கைக்கு சீனாவின் விடயத்தில் ஒன்றும் செய்யவியலாமல் உள்ளது.

சர்வதேச ரீதியாக ஒரு யுத்தம் என்கிற ஒன்று இனிவரும் காலங்களில் வருகிறபோது இலங்கை பாதிப்படையும். அமெரிக்காவோ இந்தியாவோ சீனாவோ யுத்தமொன்று நிகழுமாகவிருந்தால் அவர்கள் இலங்கையைத் தான் குறிவைப்பார்கள்.

இலங்கையே இன்று கையறு நிலையில் இருக்கும்போது இந்தப் பிரச்சினைகளை இலங்கையால் கையாள முடியாது.

இலங்கை தனக்கென ஒரு சரியான கொள்கைகளை உருவாக்க வேண்டும். நாங்கள் மற்றைய நாடுகளினுடைய தலையீடுகளை தடுப்பதற்கான நிலையான வெளிநாட்டுக் கொள்கைகளை இறுக்கமாகக் கடைபிடிக்கவேண்டும். அவற்றைச் செய்வதற்கு இலங்கையினது தற்போதைய அரசு எந்தளவிற்கு இருக்கிறது என்றால் கேள்விக்குறிதான். பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை தற்போது வேறு வழியின்றி சர்வதேச நாடுகளிடம் கையேந்தி நிற்கும் நிலையில், எவ்வாறு இந்த வெளிநாட்டுக் கொள்கைகளையும் சர்வதேச நாடுகளின் இலங்கை மீதான அத்துமீறல்களையும் ஒப்பந்தங்களையும் எவ்வாறு கையாள முடியும்.

இலங்கை தெரிந்தோ தெரியாமலோ பூகோள அரசியல் நிலைப்பாட்டுக்குள் சிக்கிக்கொண்டுள்ளோம் என்பது தான் உண்மை.

தற்போதைய சூழலில் இலங்கை மீதான சீனாவின்ஆதிக்கத்தைஇந்தியாவால்தடுக்க சாத்தியப்பாடுகள் எந்தளவிற்கு இருக்கிறது என்பதே கேள்விக்குறிதான். ஏனென்றால் சீனாவானது இலங்கைக்கு பாரிளவிலான கடன்களை வழங்கியுள்ளது. முதலீடுகளை இலங்கையில் செய்துள்ளது. இன்னும் பல விடயங்களை சீனா இலங்கையில் செய்து வருகின்றது. கலாச்சார விடயங்களில் கூட சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் காணப்படுகின்றது. இந்தியா இனியொரு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனில் தந்திரோபாய ரீதியிலாக இனங்கள் சார்ந்து வேலை செய்கின்ற போது தான் தங்களுடைய செயற்பாடுகளை இலங்கையில் மேற்கொள்ளலாமே தவிர அயல் நாடு என்கிற ரீதியில் தங்களது அழுத்தத்தை சீனாவை எதிர்க்கின்ற அளவில் பிரயோகிக்க முடியாது. அது கடினமானதாகவிருக்கும்.

இலங்கையினுடைய ஆதிக்கத்தில் இருக்கிற அல்லது இலங்கையை ஆளக்கூடிய இந்திய அரசு, நூறு விகிதமும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிற ஒரு அரசை உருவாக்க வேண்டும். அது சாத்தியப்படாதவிடத்து இலங்கையில் இருக்கிற இனக்குழுமங்களின் ஆதிக்கத்தைக் கூட்டவேண்டும். இந்த இரண்டில் ஒன்றுதான் இந்தியாவுக்கு இருக்கிற ஒரே வழியோ தவிர வேறு வழி கிடையாது.




சிலர் கூறுகிறார்கள் இன்றைய இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை கூட புவிசார் நடவடிக்கைகளின் விளைவு என. இது யாருடைய நிகழ்ச்சிநிரலின் கீழ் நடக்கிறது என பல்வேறுவிதமான கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றது.

ஆயுதப்போராட்டத்தை அழிப்பதற்காக சர்வதேச சமூகங்கள் இலங்கைக்கு உதவிகளைச் செய்தது என்பது வெளிப்படையான உண்மை. இதில் ஒளிவுமறைவு ஒன்றும் இல்லை. அதனை பல நாடுகளும் ஏற்றுக்கொண்டுமுள்ளன. இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியதாகக் கூறியிருக்கின்றன. சீனா ஆயுதம் வழங்கியிருக்கிறது. சர்வதேச சமூகங்கள் போராட்டத்தை அழிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறோம் எனக் கூறியிருக்கிறார்கள். இதில் மறைமுகமான விடயங்கள் எதுவும் இல்லை.



# பல்சுவை கதம்பம்



## சீத்தாப்பழத்தில் உள்ள மருத்துவ பயன்கள் !!

சீத்தாப்பழத்தில் நீர்சத்து, மாவுசத்து, புரதம், கொழுப்பு அதிகமாக உள்ளது. மேலும், விட்டமின் சி, விட்டமின் ஏ, பொட்டாசியம், இரும்பு சத்து போன்றவை அடங்கியுள்ளன.

சர்க்கரை நோயாளிகளுக்கு சீதாப்பழ இலை அருமருந்து. சீதாப்பழ மரத்தின் வேர் கருச்சிதைவை கட்டுப்படுத்துகிறது. சீத்தாப்பழத்தை தொடர்ந்து உண்டு வந்தால் இதயம் பலப்படும். காசநோய் இருந்தாலும் மட்டுப்படும்.



சீத்தாப்பழம் குளிர் மற்றும் காய்ச்சலை குணப்படுத்தும். இலைகளை அரைத்து புண்கள் மேல் போட்டு வந்தால் புண்கள் ஆறும். சீத்தாப்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் ஆஸ்துமா, காசநோய் கட்டுப்படும். நினைவாற்றல் அதிகரிக்கும்.

சீத்தாப்பழத்தை உண்ண செரிமானம் ஏற்படும். மலச்சிக்கல் நீங்கும். பிசிஓடி பிரச்சனை உள்ள பெண்களும் சீத்தாப்பழத்தை சாப்பிடலாம். அதிக உடல் எடை கொண்டவர்கள் சீத்தாப்பழத்தை சாப்பிடலாம். சீதாப்பழம் ஜீரண சக்தியை அதிகரிப்பதால் பித்தம், வாந்தி, பேதி, தலைசுற்றல் ஆகியவற்றையும் குணப்படுத்தும். சீத்தாப்பழம் சாப்பிட்டால் எலும்பு உறுதியாகும். பல்லும் உறுதியாகும்.

சீத்தாப்பழம் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் நீங்கும். உடலில் உள்ள இரத்தத்தை சுத்திகரித்து இரத்த சோகை நோயைப் போக்கும். அதுமட்டுமின்றி உடல் சோர்வைப் போக்கி உடலுக்கு புத்துணர்வைத் தரும். பித்தம் தெளிந்து மனநோய் குணமாக சீத்தாப்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வர வேண்டும்.

## முகத்தை பளபளப்பாக வைத்துக்கொள்ள உதவும் அழகு குறிப்புகள் !!

இரவு தூங்க செல்லும் முன்பு விட்டமின் இ மாத்திரையில் இருந்து சிறிது எண்ணெய்யை எடுத்து முகத்தில் தடவி மசாஜ் செய்து விட்டு காலையில் எழுந்து வெதுவெதுப்பான தண்ணீரில் முகத்தை கழுவி வந்தால் முகம் பளிச் என காணப்படும்.

சருமம் ஆரோக்கியமாகவும், பொலிவாகவும், இளமையுடனும் இருக்க வேண்டும் என்றால் அதற்கு ஈரப்பதம் கட்டாயம் தேவை. பாதாம் எண்ணெயிலும் ஈரப்பதம் உள்ளது. எனவே, இதனையும் இரவு முகத்திற்கு தடவி மசாஜ் செய்து காலையில் வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவி வரலாம்.

வெள்ளரிக்காயில் அதிக அளவு ஈரப்பதம் உள்ளது. எனவே, இரவு தூங்க செல்லும் முன்பு வெள்ளரிக்காயை அரைத்து முகத்தில் தடவி விடவும். பின்பு காலை, எழுந்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவி வந்தால் முகம் பொழிவுடன் காணப்படும்.


பப்பாளி முகத்திற்கு குளிர்ச்சியை கொடுக்கும்.பப்பாளி துண்டுகளை நன்கு மசித்து முகத்தில் தடவி மசாஜ் செய்து வந்தால் முகம் பளிச்சிடும். சிலர் மாய்ஸ்சரைசர்களுக்கு பதிலாக தேங்காய் எண்ணெய், ஆலிவ் ஆயில், விளக்கெண்ணெய் போன்றவற்றை பயன்படுத்துவதுண்டு.

வீட்டில் கிடைக்கும் பொருட்களை வைத்து ஆரோக்கியமான டோனர்களை உருவாக்க முடியும். தக்காளி சாறுடன் 1 ஸ்பூன் தயிர் கலந்து முகத்தில் தடவி வர முகத்தில் உள்ள கருமை நீங்கி வெண்மை நிறம் வெளிப்படும்.

முடிந்தவரை வெயிலில் இருந்து விலகி இருக்கலாம். தவிர்க்க முடியாத காரணத்தினால் வெளியே செல்ல நேர்ந்தால் சருமத்தை வெயிலில் படாமல் மறைத்துக்கொள்வது நல்லது. பாதாம் பருப்பை நன்கு அரைத்து சிறிதளவு தேன்,எலுமிச்சை சாறு கலந்து தடவி சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவினால் முகம் பளிச்சிடும்.



## புருவங்கள் நன்கு அடர்த்தியாக வளர உதவும் குறிப்புகள் !!



விளக்கெண்ணெய்யை தினமும் இரவில் படுக்கும் முன் புருவங்களின் மீது தடவி மென்மையாக மசாஜ் செய்து வந்தால் புருவங்களில் உள்ள முடிகள் நன்கு அடர்த்தியாக வளரும். இச்செயலை தொடர்ந்து 1 மாதம் பின்பற்றி வந்தால், உங்கள் புருவ அமைப்பில் நல்ல மாற்றத்தைக் காண முடியும். உடலும் குளிர்ச்சி அடையும்.

பாதாம் எண்ணெயில் விட்டமின் ஏ, பி மற்றும் ஈ அதிகம் உள்ளது. இது முடிக்கு நல்ல ஊட்டத்தை வழங்கி, முடியின் வளர்ச்சியைத் தூண்டி விடும். தினமும் இரவில் படுக்கும் முன் பாதாம் எண்ணெயை புருங்களில் மென்மையாக தடவி மசாஜ் செய்து, இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இதனால் புருவ வளர்ச்சி தூண்டப்படும்.

கற்றாழை ஜெல்லை இரவு படுக்கும் முன் புருவங்களில் தடவி, மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், புருவங்கள் அடர்த்தியாக வளர்வதைக் கண்கூடாக காணலாம்.

வெந்தயத்தை நீரில் ஊற வைத்து, பின்பு பேஸ்ட் போல அரைத்து, புருவங்கள் மீது தடவி 20 நிமிடம் வரை ஊற வைத்து பின்பு கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு 2 முறை செய்து வர, புருவங்கள் நன்கு அடர்த்தியாக வளர்வதை காணலாம்.

தேங்காய் எண்ணெய்யானது முடியின் வளர்ச்சியைத் தூண்டக்கூடியவை. எனவே இந்த எண்ணெய்யை தினமும் புருவங்களின் மீது தடவி வர, அந்த பகுதிகளில் ரத்த ஓட்டம் அதிகமாகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள மயிர்கால்கள் வலுபெற்று புருவங்கள் நன்கு அடர்த்தியாக வளரும்.

## வல்லாரை கீரையில் சத்துக்கள் எதற்கு பயன்படுகிறது...?

வல்லாரை கீரையின் இலை தண்டுகள், பூக்கள் அனைத்துமே மருந்தாக பயன்படுகிறது. வேர்கள் மற்றும் விதைகளிலிருந்தும் பல்வேறு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

வல்லாரையின் இலைச்சாறு தினமும் 5மி.லி. காலை, மாலை சாப்பிட்டு வரவும். யானைக்கால், விரை வாதம், அரையாப்பு, கண்டமால் குணமாகும். ஆமணக்கு எண்ணெய்யில் வல்லாரை இலையை வதக்கி மேலே பரப்பி விட வேண்டும். கட்டிகளும் கரையும். அரைத்துப் பூச புண்களும் ஆறும்.

வல்லாரைகீரை இலைகளை பற்களின் மீது தேய்ப்பதால், மஞ்சள் கறை நீங்கி, பற்கள் மின்னும். பற்கள் ஈறுகள் வலுவடையும். வாய்ப்புண் வாய்நாற்றம் நீங்க, வல்லாரைகீரை இலைகளை காலை வேளையில் மென்று தின்று வரலாம்.

வல்லாரை, உத்தாமணி, மிளகு சமமாக எடுத்து அரைத்துக் குண்டுமணி அளவு மாத்திரை செய்து காலை, மாலை 1 மாத்திரை வெந்நீரில் கொடுக்க அனைத்து வகையான காய்ச்சலும் தீரும்.

வல்லாரை கீரையில் இரும்புசத்து, சுண்ணாம்புசத்து, தாதுஉப்புக்கள் உயிர்சத்து, விட்டமின் A,C அதிகம் உள்ளது. மூளைவளர்ச்சிக்கும், ஞாபக சக்திக்கும் உதவுகிறது. வல்லாரை இலையுடன், கீழாநெல்லி இலையைச் சம எடையளவு சேர்த்து அரைத்து 5 கிராம் அளவு காலை வேளை மட்டும் தயிரில் கலந்து உண்டு வர நீர் எரிச்சல் தீரும்.

வல்லாரை இலை, தூதுவளை ஆகிய இரண்டையும் சம எடையளவு எடுத்து பொடி செய்து கொள்ளவும். ஒரு தேக்கரண்டி அளவு உண்டு வர, காசநோயில் ஏற்படும் சளித்தேக்கம், தொண்டைக் கம்மல் நீங்கும்.

# போரியல் வரலாற்றில் உலகறிந்த கடற்புலிகளின் பலமும், சீன உளவுக்கப்பலின் இலங்கை விஜயமும்

கடந்தவார தொடர்ச்சி...

இவர்கள் உறுதுணையாகச் செல்ல வேண்டும் அதாவது கடற்படைகளம் செல்கின்றது என்றால் அதிலே ஒரு தரையிறக்கத்தை ஒரு கிராமத்தையே தரையிறக்கம் செய்ய கூடிய அளவிற்கு அங்கு கப்பல் வசதிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

ஆகவே சீனாவை நோக்கி இலங்கை வருகின்ற கப்பல் பாகிஸ்தானை நோக்கி செல்கின்ற போது இந்தியாவினுடைய இந்து மா சமுத்திரத்திலே பாரிய பிளவு நடவடிக்கைகளை மேற்கொண்டு தான் அந்த கப்பல் சீனாவை மீண்டும் சென்றடைவதற்கான நிலைமை இருக்கின்றது. இன்று சர்வ தேச ரீதியாக பார்க்கின்ற பொழுது உக்ரைன், தாய்வான் போன்ற பிரச்சனைகள் இன்று சீனா மீண்டும் தாய்வானுடன் மோதப்போகின்றது என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. இடைக்கிடை சூட்டுச்சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. ஆகவே இலங்கை கடற்பரப்பிலே தொடர்ந்தும் இந்த கப்பல்களை இவ்வாறான எந்த நாட்டு கப்பலாக இருந்தாலும் ஒரு ஆயுதம்தாங்கிய கப்பலை ஒரு உளவுக்கப்பலை அனுப்புவது என்பது இந்த நாட்டிற்கு நாங்கள் செய்கின்ற ஒரு துரோகமாகவே இருக்கின்றது.

ஏனென்றால் இன்று கடல் வளத்தை சுரண்டுகின்றார்கள், நில வளத்தை சுரண்டுகின்றார்கள் அமெரிக்கா இன்று பெற்றோலிய ஸ்தாபனங்கள் பெற்றோலிய வளங்களை சுரண்டி இருக்கின்றது இந்தியா இன்று கடற்பரப்பிலே கடற்வளங்களை சுரண்டி இருக்கின்றது சீனா. அவ்வாறாக இருந்தால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இந்த நாடு தாரைவார்க்கப்பட்டிருக்கின்ற இந்த நிலையில் இதனை மீண்டெடுப்பதற்கு இங்கு ஒரு ஸ்திரமான அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே இன்றைய காலகட்டத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது.

இவ்வாறான கப்பல் இந்த நாட்டுக்குள் வந்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலக்கட்டத்தில் கடற்புலிகள் அவர்களுடைய அனுமதியின்றி இந்த நாட்டுக்குள் ஒரு அடியேனும் அனுமதிதார்கள் என்பதை கொண்டிருப்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆகவே இந்த சீனாவினுடைய கப்பல் என்பது தற்பொழுது இலங்கையை நோக்கி வந்துக்கொண்டிருக்கும் என்பதிலே உளவு நடவடிக்கைகள் சட்லைற் வசதிகள் சட்லைற் கொண்டு வேவு நடவடிக்கைகள் அது மட்டுமல்ல ஒரு நாட்டையே வரைபடமாக எடுத்து எந்த எந்த தளங்கள் எங்கு எங்கு இருப்பது என்ற விடயத்தை அறியக்கூடிய தன்மை கொண்டிருக்கின்றது. கடல் பரப்பிலே அடிமட்டத்தில் இருந்து தரை போன்று படமாக்கிக்கொள்ளக்கூடிய புதிய நவீன வகையான ஸ்கேனர் கருவிகள் பொறுத்தப்பட்டிருக்கின்றது. இலங்கையிலே கிட்டத்தட்ட 700இல் இருந்து 1000வரையிலான கீலோ மீற்றர் தொலைவிலே இருக்க கூடிய அனைத்து விடயங்களையும் கண்காணிக்ககூடியதான நிலைமை உருவாக்கப்படும். தற்பொழுது இந்த கப்பலானது ஒரு காரைநகர், மண்டதீவு, போன்ற பகுதிகளுக்கு இந்த கப்பல் செல்லுமாக இருந்தால். அந்த பகுதிகளிலே அந்த கப்பல் நிலைநிறுத்தப்படுமாக இருந்தால் மன்னார் பகுதிகளிலே அந்த கப்பல் நிறுத்தப்படுமாக இருந்தால் இந்தியாவை முற்று முழுதாக கண்கானித்து அதனுடைய தரவுகளை எடுக்ககூடிய செயற்கைகோள் ஊடாக தரவுகளை எடுக்க கூடிய நிலைமை சீனாவினுடைய அந்த கப்பலிலே அவ்வாறான தன்மை கொண்டிருப்பதாக உளவுச்செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆகவே அதனை கருத்திற்கொண்டு உண்மையிலே இந்த நாடு எவ்வாறு செல்லப்போகின்றது. எவ்வாறு இந்த நாட்டை வைத்து ஏனையநாடுகள் பயன்படுத்த போகின்றது. எதற்காக இப்படிபட்ட ஆயத கப்பல் வர போகின்றது. இனி இவர்களுடைய கப்பல் வந்த பின்பு இந்தியாவில் இருந்து ஒரு கப்பலும்,அமெரிக்காவில் இருந்து ஒரு கப்பலும் களமிறக்கப்படபோகின்றது. ஆகவே இதுவொரு போர்க்களம் நிறைந்த ஒரு கடல்தளமாக மாற கூடிய சூழல் கூட இங்கு காணப்படுகின்றது. இதிலே அமெரிக்கா,இந்தியா,சீனா நாடுகள் இவர்கள் தமது படைத்தளங்களை படைப்பலத்தை பரீட்சைபார்க்கின்ற ஒரு நாடுகளாகவே சர்வதேச ரீதியாக இருக்கின்றார்கள். உலகத்திலே 4வது காலால் படையை கொண்ட இந்தியா இராணுவம் போர்தந்திர நடவடிக்கைகளிலே மிக முக்கியமான வகிபாகத்தை வகிக்கின்ற அமெரிக்கா பொருளாதார ரீதியிலும் ஆயத ரீதியிலும் ஒரு அச்சுறுத்தலாக உலக நாடுகளுக்கே சவால் விடுகின்ற ஒரு நாடாக சீனா அதாவது வைரஸ் தாக்குதலிலே பிரபல்யமான சீனாவும் இன்று ஒரு மும்முனை போட்டியாக இலங்கைக்குள்ளே தமது ஒத்திகைகளை பார்த்திருந்தார்கள். ஒத்திகை பார்பதற்கான சந்தர்ப்பமும் இல்லை இந்த நாடும் அதற்காக தயாராக இல்லை என்பதை இந்த நாட்டினுடைய தலைவர்கள் எடுத்துக்கூற வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கின்றது.

ஆகவே இந்த கப்பலின் இந்த வருகையினால் இலங்கையில் ஏற்பட கூடிய பேராபத்தை தடுப்பதாக இருந்தால் இந்த சீன கப்பலை இங்கிருந்து வெளியேற்ற வேண்டும். சீனாவினுடைய முதலீடுகளை இங்கிருந்து வெளியேற்ற வேண்டும். சீனாவினுடைய அம்பாந்தோட்டை துறைமுகம்,போட் சிற்றியை தன் வசப்படுத்த வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை செய்தால் மட்டுமே இந்த இலங்கை தீவு சீனாவின் பிடிக்குள் இருந்து காப்பாற்றப்படும். இல்லையேல் இந்த கோட்டபாய ராஜபக்ஸ,மஹிந்த ராஜபக்ஸ, பசில் ராஜபக்ஸ அவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை ஒப்பந்தங்கள் தொடர்ந்தும் 90வருடங்கள் நிறைவேற்றப்படுமாக விருந்தால் இந்த பகுதிகள் கூடுதலாக சீனாவினுடைய பகுதிகளாக இலங்கை தலைநகரம் காட்சியளிக்கும். தொடர்ந்தும் சீன மயமாக்கல் இந்த நாட்டில் உருவாக்கப்படும். ஆகவே இது சீன சார்பான நாடாக மாறுவதற்கான ஒரு அடிதளத்தை இந்த ராஜபக்சக்கள் தான் கடனைப்பெற்று உருவாக்கினார்கள். இந்தியா தற்பொழுது நேரடியாக களம் இறங்கியுள்ளது. அதே போன்று அமெரிக்காவும் களமிறங்கியுள்ளது. இந்த சூழலிலே சீனாவினுடைய கடன்களை மீளச்செலுத்துவதற்கான ஒரு நகர்வுகளை மேற்கொண்டால் மட்டுமே சீன போர்க்கப்பலாக இருக்கலாம் சீன உளவுக்கப்பலாக இருக்கலாம். சீன படையணியாக இருக்கலாம். நாட்டில் வருவதை தடுத்து நிறுத்த முடியும் அல்லது போனால் மீண்டும் இந்த நாட்டிலே கடந்த காலத்தில் ஆயத அமைப்புக்களை தன் வசம் வைத்துக்கொண்டு இலங்கை, இந்திய நாடுகள் தமக்குள்ளே பேரம் பேசிக்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள்,ரெலோ,புளட்,ஈ. பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்களை தமது ஆட்சி அதிகாரத்தை வலுவாக கொண்டிருந்தார்கள். அவ்வாறான நிலைமையை மீண்டும் உருவாக்குவதற்கு இந்த இலங்கை வித்திடுகின்றதா? அவ்வாறு உருவாக்கப்பட்டால் மீண்டும் தமிழீழ விடுதலைலப்புலிகளுடைய உருவாக்கம் உருவாக்கப்பட்டு இந்தியா தனது பூகோள ரீதியான பாதுகாப்பை மீளவும் கட்டியெழுப்புவதற்காக இரகசிய திட்டத்தை இந்தியா வகுத்துக்கொண்டிருக்கின்றது.

மீண்டும் ஒரு யுத்த சூனியமாக இந்த நாடு மாறாத வரையிலே அரசாங்கம் சீனாவை உடனடியாக சீனாவின் ஆதிக்கத்தை இந்த நாட்டில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் அல்லது சீனாவினுடைய ஒரு தலைநகரமாக அல்லது சீனாவினுடைய குட்டி தலைநகரமாக கொழும்பு விளங்கும் என்பதிலே மாற்றுக்கருத்து இல்லை.

**இரணியன்**

# வாழ்க்கை தத்துவம் கவிதை வரிகள்

நமக்கு வாழ்கை பல அனுபவங்களையும் பாடங்களையும் கற்றுத் தருகின்றது அதில் முக்கியமான ஒன்று தான் நாம் யார் யாரிடம் எவ்வாறு பழக வேண்டும் எந்த அளவோடு பழக வேண்டும் என்பது.

உங்கள் மீது அதீத நம்பிக்கை வைத்திருப்பவர்களை ஏமாற்றுவது புத்திசாலித்தனம் என்று நினைக்காதீர்கள் அது தான் துரோகத்தின் உச்சம்.

உங்களுக்கு தெரிந்த விடயங்களை மட்டும் மற்றவர்களுடன் பேசி பழகுங்கள் இது காலப்போக்கில் உங்கள் மீதான நம்பிக்கை மற்றும் மரியாதையை அதிகப்படுத்தும்.

சந்தோஷமான நேரத்திலும் துன்பமான நேரத்திலும் நாம் நினைவில் வைத்திற்குக்க வேண்டிய ஒரு உண்மை இந்த நிமிடம் கூட நிரந்தரம் இல்லை.

நினைவில் வைத்துக் கொள் உன் வாழ்க்கையில் உறக்கம் இரக்கம் இரண்டும் அளவோடு தான் இருக்க வேண்டும். உறக்கம் அளவுக்கு மீறினால் சோம்பேறி என்பார்கள். இரக்கம் அளவுக்கு மீறினால் ஏமாளி என்பார்கள்.

கடன்களும் நினைவுகளும் தேவைக்கு ஏற்ப அளவோடு இருக்க வேண்டும். கடன்களும் நினைவுகளும் அளவுக்கு மீறினால் இரண்டுமே தூக்கத்தை பறித்து விடும்.

வாழ்வில் வரும் வலிகளை சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொள்ளுங்கள். அப்படியே சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொண்டால் உன்னை விட வலிமையானவர்கள் யாரும் இல்லை இந்த உலகில்.

ஒரு தவறை செய்தால் ஒதுக் கொள்ள எந்த சூழ்நிலையிலும் தயங்காதீர்கள் அவற்றை சரி செய்து கொள்ள முடியும். ஆனால் செய்த தவறை இல்லை என்று சாதிக்காதீர்கள் பிறகு அவற்றை வாழ்நாளில் சரி செய்ய முடியாது.

மற்றவர்களிடம் குற்றம் என அடையாளம் காணும் விடயம் நம்மக்கு ஏற்பட்டால் அதை சோதனை என்று அழைக்கிறோம்.

உன் பாதையை நீயே உருவாக்கிக் கொள்ளும் தண்ணீராக இரு. வாழ்வில் எதையும் சாதிக்கலாம். அடுத்தவர் பாதையை தடுக்கும் பாறையாக இருந்து விடாதே.

மனதில் நஞ்சு வைத்து உதட்டில் தேனாக கொஞ்சி பேசும் மனிதர்களும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதே.

காகமும் குயிலும் பார்ப்பதற்கு இரண்டும் ஒன்று போல தான் தோற்றமளிக்கும். ஒருவரின் வெளித் தோற்றத்தை வைத்து ஒருவரை மதிப்பிடாதீர்கள்.





# இலங்கைத்தீவின் 15000 சதுரக்கிலோ மீற்றர் நிலப்பரப்பை ராஜபக்சக்களிடம் இருந்து சீனா ஆக்கிரமித்தது எப்படி?

கடந்தவார தொடர்ச்சி...

திட்டத்தின் கால அட்டவணைக்கு முன்னதாகவே கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமையால் செலவுகள் அதிகரித்த வண்ணமே இருந்தன. காரை இறக்குமதி செய்ய வரும் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரிக்காமல் அம்பாந்தோட்டைக்குத் தான் வர வேண்டும் என அரசாங்கம் அறிவித்து அம்பாந்தோடைத் துறைமுகத்தை இயங்க வைக்க முயன்றது. இருந்தபோதும், நிதி அமைச்சின் ஆண்டறிக்கையின் படி 34 கப்பல்கள் மட்டுமே 2012 ஆம் ஆண்டு இந்த அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு வந்திருந்தன. ஆனால் அதே நேரம் கொழும்புத் துறைமுகத்திற்கு 3,667 கப்பல்கள் வந்திருந்தன.

"நான் அரசாங்கத்திற்கு வந்த போது, தேசியத் திட்டமிடல் அமைச்சரை அழைத்து, அம்பாந்தோட்டை துறைமுகத்தை நியாயப்படுத்துமாறு கேட்டுக் கொண்டேன்", என தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான ராஜாங்க அமைச்சரான கர்ஷ டி சில்வா ஒரு நேர்காணாலில் தெரிவித்தார். அதற்கு "இதைச்செய்யுமாறுசொல்லப்பட்டோம். நாம் செய்தோம்" என பதிலளிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

துறைமுகத்தை விஸ்தரிப்பதாக முடிவெடுத்து 2012 ஆம் ஆண்டு சீன அரசாங்கத்திடம் சென்று $757 மில்லியன் கடனாக ராஜபக்ஸ கேட்டார். அதனை வழங்க சீனா உடன்பட்டது. ஆனால் இந்த முறை நிபந்தனைகள் இறுக்கமாக இருந்தன. 2008 இல் உலக நிதி நெருக்கடியின் பின்னர் வழக்கமாக 1 அல்லது 2 சதவிகிதத்திற்கு மேலானதாக மாறக்கூடிய மாறுபட்ட விகிதத்தில் முதல் கடன் $307 மில்லியன் கிடைத்தது. (ஒப்பீட்டிற்காக, இதே போன்ற கட்டுமானத் திட்டங்களிற்கான ஜப்பானின் கடன் 1/2% இற்கும் குறைவாகக் கிடைத்தது)

ஆனால் புதிய நிதியுதவி பெற, தொடக்கக் கடன் மிக அதிகமான 6.3 சதவிகிதம் நிலையான விகிதத்திற்கு மீள்பேச்சிற்கு உட்பட்டது. அதற்கும் மகிந்த ராஜபக்ஸ உடன்பட்டார். திட்டத்திற்கான அதிகரித்த செலவுகள், அதிகரித்து வரும் கடன்கள், துறைமுகம் வணிகமீட்டாமல் நெருக்கடியில் இருந்தமை போன்றன எதிர்த் தரப்பால் பலமான எதிர்ப் பரப்புரைக்குப் பயன்படுத்தப்பட்டது. சீனா குறித்தும் சந்தேகங்கள் ஏற்படுத்திப் பரப்புரை செய்யப்பட்டது. இதனால் மகிந்த ராஜபக்ஸ தேர்தலில் தோல்வியடைந்தார்.

மைத்திரிபால சிறிசேனா தலைமையில் ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கம் இலங்கையின் நிதி உடன்படிக்கைகள் தொடர்பில் ஆராய வேண்டிய கட்டாயத்தில் இருந்தது. அச்சுறுத்தும் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகைக்கு இந்தப் புதிய அரசாங்கம் முகங்கொடுத்தது. மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சியில் இந்த நாட்டின் கடன் $44.8 பில்லியன்ஆக மூன்று மடங்கிற்கு அதிகரித்தது. 2015 ஆம் ஆண்டில் மட்டும் $4.68 பில்லியன் கடன் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது.

புதிய அரசாங்கம் இலங்கை, இந்தியா, ஜப்பான், மற்றும் மேற்கு நாடுகளை நோக்கியதாக மாறியது. ஆனால் இலங்கைக்குச் சீனாவால் வழங்கப்பட்ட கடனை மற்றும் நிதியை வேறு எந்த நாட்டாலும் ஈடு செய்ய முடியாது என்பதை இலங்கை அதிகாரிகள் விரைவில் உணர்ந்தனர். "எமது நாட்டின் பொருளாதாரம் கீழிறங்கி விட்டது. கிடைக்கும் வருவாய்கள் கடன்களிற்கான வட்டிகளைச் செலுத்தப் போதுமானதாக இல்லை என தற்போதைய அரசாங்கத்தின் முதலாம் ஆண்டு ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்த ரவி கருநாயக்க தெரிவித்தார். "இந்த அரசாங்கமும் கடன்களைப் பெறுகின்றது. எம்மால் உடனடியாகக் கடன் வாங்குவதை நிறுத்த முடியாது. இது ஒரு அஞ்சல் ஓட்டம் போன்றது. பொருளாதாரம் ஒரு உறுதிப்பாட்டுக்கு வரும் வரை நாங்கள் இதனைச் செய்ய வேண்டியுள்ளது", என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை கடந்த ஆண்டு $3பில்லியன் கடன் தொகையைத் திருப்ப வழங்க வேண்டியிருந்ததாக மத்திய வங்கி மதிப்பிட்டுள்ளது. சில கடன்கள் அரசாங்கப் பதிவேடுகளில் இல்லாமல் அதற்குப் பதிலாக தனிப்பட்ட திட்டங்களின் பகுதியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக Verité Research என்ற ஆய்வு நிறுவனத்தில் பொருளாதார நிபுனராக இருக்கும் நிசாந்த டி மெல் தெரிவித்தார். எனவே சீனா அரசிற்கு அந்த ஆண்டு கொடுக்க வேண்டியிருந்த கடன் தொகை $5பில்லியன் வரை ஆகுமெனவும் இந்தத் தொகை ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்கின்றது எனவும் கட்ட வேண்டிய கடன்களைக் கட்டுவதற்கக கடந்த மே மாதம் $1பில்லியன் கடன் தொகையை மேலும் சீன அபிவிருத்தி வங்கியிடம் இலங்கை பெற்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்க அதிகாரிகள் 2016 ஆம் ஆண்டில் மீண்டும் சீன அதிகாரிகளுடன் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்காகச் சந்திக்கத் தொடங்கினர். தங்களது துறைமுகத்தை தாங்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றிக் கையாள வேண்டும் என்று இலங்கைத் தரப்பு எதிர்பார்க்கின்றது. ஆனால் சீன நிறுவனத்தைத் துறைமுகத்தின் முக்கிய பங்குகளை வாங்க அனுமதியளிக்க வேண்டும் என்று சீன அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

China Harbor my;yJ China Merchants Port போன்ற சீன அரசிற்குச் சொந்தமான நிறுவனங்கள் கட்டுப்பாட்டை எடுக்கும் என ஒரு தெரிவு இலங்கைக்கு வழங்கப்பட்டதாக இறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக வும் இன்னும் வெளிப்படையாக முழுமையாக வெளியிடப்படாத அதன் ஒரு நகல் தன்னிடம் இருப்பதாக The Times தெரிவிக்கின்றது. China Merchants இந்த ஒப்பந்தத்தைப் பெற்றதும் அது உடனடியாக மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தியது. தொழில்துறை வலயத்தை அமைப்பதற்கு துறைமுகத்தைச் சுற்றி 15,000 ஏக்கர் நிலத்தினை அந்த நிறுவனம் கோரியுள்ளதாக இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் நடந்தவற்றை அறிந்த அதிகாரிகள் இருவர் தெரிவித்துள்ளனர். செலுத்தும் கூ1பில்லியனுக்கு இந்தத் துறைமுகத்தின் மதிப்பு இல்லை என அந்தச் சீன நிறுவனம் வாதாடுகிறது.

சில அதிகாரிகள் கடுமையாக இதனை எதிர்த்தும் அதற்கு எந்தவிதமான வெளியும் இருக்கவில்லை எனப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய அதிகாரிகள் தெரிவித்தனர். 2017 ஆம் ஆண்டு யூலையில் கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தமானது டிசம்பரில் நடைமுறைக்கு வந்தது. இந்த உடன்பாடு இலங்கையின் உரிமை என்ற தோற்றச் சிறிது அகற்றியது. துறைமுகத்தின் நடவடிக்கைகளை நிர்வகிக்கவும், வருவாயை சேகரிக்கவும் ஒரு கூட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. அது 85% China Merchants Port இற்கும் மீதி 15% இலங்கை அரசுக்கும் சொந்தமாக உள்ளது. இலங்கை அரசு வைத்திருக்கும் இந்த மிகச் சிறிய சதவிகிதப் பங்கானது சீனாவின் China Merchants Port நிறுவனமே செயற்பாடுகள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்திற்கு வழிவகுக்கும் என துறைமுகக் கையகப்படுத்தலில் நிபுணத்துவம் வாய்ந்த சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த உடன்படிக்கை குறித்த ஆரம்பப் பேச்சுகளில், துறைமுகமும் அதனை அண்டிய நிலப்பரப்பும் சீன இராணுவத்தால் பயன்படுத்தப் பட முடியுமா என்பதில் அப்படியொரு விடயத்தை வெளிப்படையாகத் தடைசெய்யுமாறு இந்திய அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டனர். இலங்கை அரசு அனுமதிக்காத விடத்து, இந்தத் துறைமுகத்தை இராணுவத் தேவைகளுக்கு வெளிநாடுகள் பயன்படுத்துவது இறுதி ஒப்பந்தத்தில் தடுக்கப்பட்டுள்ளது. சீன கடற்படை நீர்மூழ்கிக் கப்பல்கள் ஏற்கனவே இலங்கைக்கு வந்துள்ளன என்பதால் இந்தச் சரத்துச் சேர்க்கப்பட்டுள்ளது.

**பூலோபாய அக்கறைகள்**

இலங்கையின் பிரதான துறைமுகத்திலும் சீனா தனது பங்கை வைத்திருந்தது. China Harbor என்ற சீனாவின் நிறுவனமானது புதிய முனையத்தைக் கொழும்புத் துறைமுகத்தில் கட்டிக்கொண்டிருந்தது. துறைமுக நகரம் என அந் நேரத்தில் அது அறியப்பட்டது. அந்த உடன்படிக்கையின் விளைவாக 50 ஏக்கர் நிலம் சீனாவால் பெறப்பட்டது. இதன் மீது இலங்கைக்கு எந்த இறையாண்மையும் இல்லை.

2014 ஆம் ஆண்டின் இறுதியில் அதாவது மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சி முடிவுக்கு வரும் காலப்பகுதியில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு வந்து தரித்தன. அதே நாள் ஜப்பானின் பிரதமர் Shinzo Abe இலங்கைக்கு விஜயம் செய்தார். பிராந்தியத்தில் பீஜிங்கின் அச்சுறுத்தும் சமிக்ஞையாக இது பார்க்கப்பட்டது. சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்களை இலங்கையின் துறைமுகங்கள் மீண்டும் ஒருபோதும் வரவேற்காது என புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது உறுதியளித்தது. ஏனெனில் இவை இனங்காண்பதற்குக் கடினமானதாகவும் உளவுத் தகவல் சேகரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இலங்கை அதிகாரிகள் சிறிது உண்மையான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

கடன் காரணமாக சீனாவிற்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கையளித்தால் சீனா இராணுவப் பயன்பாட்டிற்கு அதனைப் பயன்படுத்தும் சாத்தியமே உள்ளது. அப்படிச் செய்வதில்லை என முன்னர் வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தாலும், குறிப்பாகச் சீனா தென் சீனக்கடலில் தீவுகளைத் தொடர்ந்து வைத்திருப்பதும் அதனை இராணுவ மயமாக்குவதும் நடைபெறுகின்றது. இறுதியான உடன்படிக்கையானது சீனா அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை இராணுவப் பயன்பாடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுக்கிறது என்று இலங்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் மற்றவர்கள் சீனாவிடம் மோசமாகக் கடன்பட்டிருக்கும் இலங்கை அரசாங்கத்தைச் சீனா தனது இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்த அழுத்தம் கொடுக்க முடியும் என்கின்றனர்.

"அரசாங்கங்கள் மாறலாம்" தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான ராஜாங்க அமைச்சரான டி சில்வா கூறினார். சீனாவின் விருப்பத்திற்குரியவரான மகிந்த ராஜபக்ஸ மீண்டும் அரசியலில் மீண்டு வந்து கொண்டிருப்பது குறித்துக் கவனமாக நோக்கப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதியின் புதிய எதிர்க்கட்சி நகரசபைத் தேர்தலில் சிறப்பான நிலைக்கு வந்தது. ஜனாதிபதித் தேர்தல் வருகின்ற ஆண்டும் பொதுத் தேர்தல் 2020 ஆம் ஆண்டிலும் வருகிறது. மீண்டுமொரு பதவிக்காலத்தை ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஸ சட்டப்படி வகிக்க முடியாதிருந்தும் அவரது சகோதரர் அதற்குத் தயாராகி வருகிறார்."இது மகிந்த ராஜபக்ஸவின் அழைப்பாகும். இது என்னுடைய தம்பிகளில் ஒருவர் என அவர் சொன்னால், அந்த நபர் வலுவாவார்", என மத்திய வங்கியின் ஆளுநராக மகிந்த அரசாங்கத்தில் பதவி வகித்த இன்னமும் மகிந்த ராஜபக்ச குடும்பத்திற்கு ஆலோசனை வழங்கும் யுதவைா ளேையசன ஊயடிசயயட கூறினார். "அரசியலமைப்புக் கட்டமைக்கப்பட்ட விதத்தினால் அவர் மேலும் ஜனாதிபதியாக முடியாவிட்டாலும், அவரே முதன்மையான ஆற்றலாக விளங்குவார்" என அவர் மேலும் கூறினார்.



மரியா அபி-கபீப்

# ஜனாதிபதி ரணிலின் அழைப்பும் பூனைக்கு மணிகட்டிய முஸ்லிம் க(கா)ட்சிகளும் !



கடந்தவார தொடர்ச்சி...

ஞானசாராவின் ஒரே நாடு ஒரே சட்டம் நடைமுறைப்படுத்தக் கூடாது என்ற மு.காவின் கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்தப்படாது என ஜனாதிபதி அந்த சந்திப்பில் உறுதியளித்துள்ளார்.

கண்டி, நாவலப்பிட்டி பிரதேச மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விடயங்களை பற்றி ஜனாதிபதிக்கு எடுத்துரைத்த மு.கா தலைவர் ஹக்கீம் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் இங்கு வலியுறுத்தியதுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதி போன்று பல கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு முன்வைத்ததுடன் கிழக்கில் இடம்பெறும் தொல்பொருள் நடவடிக்கை தொடர்பிலும் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார். இங்கு கரையோர மாவட்டம், தென்கிழக்கு அலகு, அநியாய கைது நடவடிக்கைகள் என்ற கதைகள் பற்றி மூச்சுக்கூட விடவில்லை என்கின்றனர் அங்கிருந்தவர்கள். ஆனாலும் அமைச்சுக்கள் ஜக்போட் அளவில் காத்திருக்கிறதாம் மு.காவுக்கு.

இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீமுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம். எம்.ஹரீஸ், பைசால் காஸிம், எம்.எஸ். தௌபீக், கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், பிரதித்தவிசாளர் எம். நயீமுல்லா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

**தனியன் கும்கியை சந்தித்தது**

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்க்குமாறு ஜனாதிபதியிடம் மக்கள் காங்கிரஸ் எழுத்துமூல ஆவணம் கையளித்திருப்பதுடன் தீர்க்கமான நடவடிக்கைஎடுப்பதாகசந்திப்பில்ஜனாதிபதி உறுதியளித்திருப்பதாக மக்கள் காங்கிரஸ் ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் அறிவித்துள்ளது. 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற செயலணியின் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளுக்கு, ஜனாதிபதி உடன்பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற செயலணியின் அறிக்கையை மரமும் (முஸ்லிம் காங்கிரஸ்), மயிலும் (மக்கள் காங்கிரஸ்) தூக்கிப்பிடித்துள்ளதையும் குதிரை (தேசிய காங்கிரஸ்) எட்டியுதைத்துள்ளதையும் காணலாம். தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லா 'ஒரே நாடு, ஒரே சட்டம்' செயலணியின் அறிக்கை தொடர்பில் இப்போது பேசுவது அர்த்தம் அற்றது. அது செத்த பாம்புக்கு புத்துயிர் கொடுக்க முயல்வது போன்றது ஆகும் என தெரிவித்துள்ள விடயம் இங்கு உன்னிப்பாக பார்க்கவேண்டிய ஒன்றாகும்.

ஜனாதிபதி பதவியில் இருந்து கோத்தாபய ராஜபக்ஸ விலகியமையை அடுத்து ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியும் கலைந்து போய் விட்டது. ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பாக அவர்களுடன் நேருக்கு நேர் மிக கடுமையாக முரண்பட்டு கொண்டு வெளியேறியவன் நான் என்பதை இத்தருணத்தில் நினைவு படுத்துகின்றேன். ஒரே நாடு ஒரே சட்டம் என்று நீங்கள் சொல்வது என்ன? என்று பல நூற்று கணக்கானோர் திரண்டிருந்த உயரிய சபையில் வைத்து கோத்தாபய ராஜபக்ஸ வை நான் வினவினேன். அவருக்கு அதை பற்றி எதுவுமே தெரியாது என்றும் அதை அவர் அறிந்து கொள்வதற்காகவேதான் செயலணி அமைத்து இருக்கின்றார் என்றும் எனக்கு கோத்தாபய ராஜபக்ஸ பதில் தந்தார். எனவேதான் அவர் பதவி விலகியமையுடன் அந்த செயலணியும் இறந்து விட்டது, செயல் இழந்து விட்டது. சிலர் அதை பற்றி இப்போது பேசுவது நகைச்சுவையாக, கோமாளித்தனமாக தெரிகின்றது. ஒரே நாடு ஒரே சட்டம் குறித்து தற்போது பேசுவது அர்த்தம் அற்றது , செத்த பாம்புக்கு புத்துயிர் கொடுக்க முயல்வது போன்றது ஆகும் என்று தே.கா தலைவர் அதாஉல்லா பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில், புதன்கிழமை மாலை (10) அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தலைமைறிசாத்பதியுதீன்உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடினர். இந்த சந்திப்பில் பிரதமரும் பங்கேற்றிருந்தார். ஆனால் மக்கள் காங்கிரஸின் சார்பிலான எந்த பாராளுமன்ற உறுப்பினரும் கலந்து கொண்டிருக்கவில்லை. அதற்கான காரணமாக அவர்களை கட்சியிலிருந்து நீக்கியாக காரணம் கூறப்படுகின்றது. நீதிமன்றில் நீண்ட வழக்கின் பின்னர் செயலாளராக அறிவிக்கப்பட்ட சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் இந்த நிகழ்விலும் கலந்துகொள்ளவில்லை என்பது இங்கு உன்னிப்பாக நோக்கப்படுகின்றது. இருந்தாலும் இஷாக் ரஹ்மான், அலி சப்ரி ரஹீம், முஷாரப் முதுநபீன் மூவரையும் இணைத்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திக்க செல்லாமை வரவேற்கத்தக்கது என்ற கருத்து மக்கள் காங்கிரஸ் ஆதரவாளர்களிடம் இருக்கிறது. ரவூப் ஹக்கீமுக்கு முள்ளந்தண்டு பலமில்லை அதனால் தான் ஹரீஸ், பைசல் காசிம்,தௌபீக் ஆகிய மூவரின் தயவிலும் ரணிலை சந்திக்க சென்றார். கட்சியானது கொள்கையிலும் மக்கள் பலத்திலும் தலைவனின் வழிகாட்டலிலும் வலுப்படுத்தப்பட வேண்டியது பா.உறுப்பினர்கள் பஸ்ஸில் ஏறி இறங்கும் பயணிகள் அவர்களை நம்பி கட்சியை கட்டி வளர்க்க கூடாது என்ற படிப்பினை ஒரு படிமுறை என்ற வாதம் இங்கு வலுவாக நியாயம் பெறுகின்றது.

இந்த நாட்டில் பொருளாதாரம் சீரழிந்தமைக்கு இனவாத, மதவாத சக்திகளின் கைகள் ஓங்கியமையே பிரதான காரணம். இந்த அரசாங்கத்துக்கு முன்னர் ஆட்சியிலிருந்த ஜனாதிபதியின் தலைமையிலான அரசு, இனவாதத்தையும் மதவாதத்தையும் மூலதனமாகக் கொண்டே ஆட்சியை அமைத்தது. இனவாதத்தை பரப்புவதன் மூலமே தமது அரசியல் இருப்பை நிலைப்படுத்தலாம் எனவும் எண்ணி, தொடர்ச்சியாக இனவாத சக்திகளை வளரவிட்டனர். அதனால்தான், இந்த நாடு குட்டிச்சுவராகி, 'கியூ' யுகத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இந்த நாட்டை கட்டியெழுப்புவதாக இருந்தால், இனவாத, மதவாத சக்திகளின் கைகள் ஓங்கவிடாமல் தடுக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினோம். எதிர்காலத்தில், சர்வகட்சிகளையும் இணைத்து அரசு முன்னெடுத்துச் செல்லவுள்ள வேலைத்திட்டத்திற்கு, எமது கட்சியின் ஒத்துழைப்பையும் ஜனாதிபதி வேண்டிய போது, ஏனைய கட்சிகளோடு சேர்ந்து, ஒரு பொதுவான வேலைத்திட்டத்திற்காக நாட்டு நலனை முன்னிறுத்தி, பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என நாம் உறுதியளித்தோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரிவித்திருக்கிறது. அவர்களின் இந்த அறிவிப்பில் "பட்டதெல்லாம் போதும் சரணாகதி அடைவோம்" எனும் நிலைப்பாடு சற்று எட்டிப்பார்ப்பதை மறைக்க முடியாதுள்ளது.

அதுமட்டுமின்றி தற்போது பாராளுமன்றத்தில் 22ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், எந்த ஒரு அரசியல் சீர்திருத்தத்திலும் கட்சிகளின் நலனுக்கப்பால், நாட்டு நலனை முன்னிறுத்தி அதனைக் கொண்டுவர வேண்டும் என நாம் ஜனாதிபதியிடம் தெரிவித்தோம். நாட்டுமக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் இதன்போது வலியுறுத்தினோம். என்று தங்களின் எதிர்கால அரசியலுக்கு மக்கள் காங்கிரஸ் கேடயம் அமைத்துக்கொண்டுள்ளது. இங்கு மன்னார் - புத்தளம் பாதையை திறத்தல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் ஆகியவற்றினால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவித்து, அவற்றை மக்களின் பயன்பாட்டுக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிய விடயங்கள் பாராட்டத்தக்கது.அத்துடன், தாமதமடைந்துள்ள இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இங்கு வலியுறுத்தி ம.கா தலைவர் றிசாத் தனக்கு வாக்களித்த மக்களின் மனதில் நம்பிக்கையை விதைத்துள்ளார். விவசாயிகளுக்கும், கடற்றொழிலாளர்களுக்கும் தமது தொழிலை சிரமமின்றி மேற்கொள்வதற்காக, அவர்களுக்கு தேவையான எண்ணெய் வசதிகளை வழங்குமாறு வேண்டிக்கொண்ட விடயம் மட்டுமின்றி மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் தட்டுபாடு மற்றும் கட்டுப்பாட்டு விலையின்றி மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தொடர்பில் எடுத்துக்கூறியதுடன், பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைக்க ஆவன செய்யுமாறும் கோரிய விடயங்கள் மக்கள் காங்கிரசின் அகன்ற கனவின் பெருந்தன்மையை காட்டுகிறது.

மேலும், அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்தும் நீடிக்க வேண்டாமென வலியுறுத்திய விடயத்தில் அந்த சட்டத்தினால்நேரடியாகபாதிக்கப்பட்டறிசாத் பதியுதீனின் அனுபவம் எல்லோருக்கும் கண்முன்னால் வந்து செல்வதை தவிர்க்க முடியாதுள்ளது. ஏற்கனவே, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தன் (PTA) கீழ் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு இன்னும் சிறையில் இருப்பவர்களை அவசரமாக விடுதலை செய்யுமாறும், சிறிய சிறிய காரணங்களுக்காக போராட்டக்காரர்களை அநியாயமாகக் கைது செய்வதையும், பழிவாங்குவதையும் உடன் நிறுத்த வேண்டுமெனவும் வேண்டுகோள்விடுத்ததுடன் தற்போதைய நெருக்கடியான சூழலில் மக்கள் எதிர்நோக்கும் பல முக்கியமான பிரச்சினைகளை எடுத்துரைத்து, அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்த மக்கள் காங்கிரஸ் அத்துடன், மக்கள் நலன் குறித்த இன்னும் பல முக்கிய விடயங்கள் அடங்கிய, எழுத்து மூலமான ஆவணம் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்ததோடு, அவற்றை துரிதகதியில் நடைமுறைப்படுத்தித் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த ஜனாதிபதியுடனான சந்திப்பில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த மக்களுக்கு பரீட்சயமான மக்கள் காங்கிரசின் முக்கியஸ்தர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. எரிபொருள் நிரப்பு நிலையம் கொண்டுள்ள மக்கள் காங்கிரஸ் பிரமுகர்கள் இருந்தும் எரிபொருள் இல்லாமை காரணமாக இருக்குமோ தெரியாது.

எது எப்படியோ **"யார் இடித்தாவது மா கிடைத்தால் சரி" எனும் நிலைக்கு முஸ்லிம் சமூகம் வந்துள்ளது.** காகிதத்தில் எழுதிய கோரிக்கைகள், முன்மொழிவுகள், நிபந்தனைகள், சமூக விடயங்கள் செயற்பாடுகளுக்கு வந்தால் மகிழ்ச்சி. **முஸ்லிம் கட்சிகள் எல்லாம் ரணில் வசம். ரணில் முஸ்லிம் கட்சிகள் வசம் வருவாரா என்பதே இப்போதைய கேள்வியாக அமைத்துள்ளது.**

**நூருல் ஹுதா உமர்**



# விளையாட்டு செய்திகள்



## 2026 உலகக்கிண்ணம்: இலங்கை – இந்தியா இணைகிறது!

2026 இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரை, இந்தியாவும், இலங்கையும் இணைந்து நடத்தும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

2023 முதல் 2027 வரையான எதிர்கால சுற்றுப்பயணத் திட்டத்தை சர்வதேச கிரிக்கட் பேரவை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் அணியுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை அடுத்த வருடம் ஜூன் மாதம் இலங்கை நடத்தவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




## பணக்கஷ்டத்தில் தவிக்கும் கிரிக்கெட் பிரபலம்!

90 களில் கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்த்தவர்களால் வினோத் காம்ப்ளியை மறக்க முடியாது. குறுகிய காலத்தில் சச்சினுக்கு இணையான புகழை அடைந்து வந்த வேகத்தில் காணாமல் போனவர்.

50 வயது காம்ப்ளி, இந்திய அணிக்காக 1993 முதல் 2000 வரை 17 டெஸ்டுகள், 104 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ளார். டெஸ்டில் இரு இரட்டைச் சதங்கள் எடுத்துள்ளார். 1993 இல் மட்டும் இரு இரட்டைச் சதங்கள், இரு சதங்கள், ஒரு அரை சதம் என டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை அமர்க்களமாகத் தொடங்கினார்.



இந்நிலையில் பிசிசிஐ அளிக்கும் ஓய்வூதியத்தை மட்டும் நம்பி வாழ்வதாகவும் தனக்கு உரிய வேலையை மும்பை கிரிக்கெட் சங்கம் தரவேண்டும் என்றும் ஒரு பேட்டியில் காம்ப்ளி கூறியுள்ளார். பேட்டியில் அவர் தெரிவித்ததாவது:

நான் ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர். பிசிசிஐ அளிக்கும் ரூ. 30,000 ஓய்வூதியத்தை மட்டுமே நம்பி வாழ்கிறேன். அது மட்டுமே என்னுடைய வருமானம். அதுதான் என் குடும்பத்தைக் கவனித்துக்கொள்கிறது.

மும்பை கிரிக்கெட் சங்கத்திடமிருந்து (எம்சிஏ) உதவியை எதிர்பார்க்கிறேன். குடும்பத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டிய கடமை எனக்கு உண்டு. எம்சிஏவிடம் பலமுறை சொல்லிவிட்டேன், தேவைப்பட்டால் நான் பயிற்சியாளராகப் பணிபுரிகிறேன் என்று. மும்பை கிரிக்கெட் தான் எனக்கு வாழ்க்கையை அளித்தது. ஓய்வுக்குப் பிறகு கிரிக்கெட் ஆட்டங்களில் உங்களால் விளையாட முடியாது. நல்ல வேலை இருந்தால் மட்டுமே வாழ்க்கையை நல்லவிதமாக வாழமுடியும். எனக்கு ஒரு நல்ல வேலையை மும்பை கிரிக்கெட் சங்கம் அளிக்க வேண்டும். ஒருமுறை டாக்ஸியில் என் வீட்டுக்கு வருவதற்குக் கூட நண்பரிடம் கடன் வாங்கி தான் வந்தேன். இது எனக்கு வேதனையை அளித்தது. நான் பணக்காரனாகப் பிறக்கவில்லை. கிரிக்கெட் தான் எனக்கு எல்லாமும் அளித்தது. சிறு வயதில் வறுமையை அனுபவித்துள்ளேன். சில நாள்களில் உணவே கிடைக்காது. ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவன் நான்.

என்னுடைய நிலைமையைப் பற்றி சச்சினுக்கு நன்குத் தெரியும். ஆனால் அவரிடமிருந்து நான் எதுவும் எதிர்பார்க்கவில்லை. டெண்டுல்கர் அகாதெமியில் எனக்குப் பயிற்சியாளர் பணியை அளித்தார். ஆனால் அதற்காக நீண்ட தொலைவு செல்லவேண்டும். சச்சின் நல்ல நண்பர். எனக்கு உதவி செய்ய எப்போதும் தயாராக இருப்பார்.

இளைஞர்களுடன் இணைந்து பணியாற்றுவது போன்ற வேலை எனக்கு வேண்டும். அமோல் முசும்தார் மும்பை அணியின் தலைமைப் பயிற்சியாளராக உள்ளார் என எனக்குத் தெரியும். எங்கேயாவது என் தேவை இருந்தால் அங்கு நான் நிச்சயம் இருப்பேன். நானும் அவரும் இணைந்து விளையாடியுள்ளோம். அருமையான அணி இருந்தது. ஓர் அணியாக மும்பை வீரர்கள் விளையாட வேண்டும் என்பதே என் விருப்பம் என்று கூறியுள்ளார்.

## ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணி அறிவிப்பு

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை கிரிக்கெட் குழு பெயரிடப்பட்டுள்ளது.

தசுன் ஷானக - அணித்தலைவர்
தனுஷ்க குணதிலக்க
பெத்தும் நிஸ்ஸங்க
குசல் மெண்டிஸ் - விக்கெட் கீப்பர்ஃபேட்ஸ்மேன்
சரித் அசலங்க - பதில் தலைவர்
பானுக ராஜபக்ஷ - விக்கெட் கீப்பர்ஃபேட்ஸ்மேன்
அஷேன் பண்டார
தனஞ்சய டி சில்வா
வனிந்து ஹசரங்க
மகேஷ் தீக்ஷனா
ஜெஃப்ரி வாண்டர்சே
பிரவீன் ஜெயவிக்ரம
சாமிக்க கருணாரத்ன
தில்ஷான் மதுஷங்க
மதீஷ பத்திரன
நுவனிது பெர்னாண்டோ
துஷ்மந்த சமீர
தினேஷ் சந்திமால் - விக்கெட் கீப்பர்ஃபேட்ஸ்மேன்
பினுர பெர்னாண்டோ - தேர்ந்தெடுக்கப்பட்டவர், ஆனால் காயம் காரணமாக சுற்றுப்பயணம் செய்யமாட்டார்
கசுன் ராஜித - தேர்ந்தெடுக்கப்பட்டவர், ஆனால் காயம் காரணமாக சுற்றுப்பயணம் செய்யமாட்டார்

## IPL அணிக்கு புதிய பயிற்சியாளர் அறிவிப்பு!



ஐபிஎல் போட்டியில் விளையாடும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக சந்திரகாந்த் பண்டிட் நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து டெஸ்ட் அணியின் பயிற்சியாளராக மெக்குல்லம் நியமிக்கப்பட்டதை அடுத்து கேகேஆர் அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து அவர் விலகினார். இதை அடுத்து கேகேஆர் அணிக்குப் புதிய தலைமைப் பயிற்சியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். தலைவர் ஷ்ரேயஸ் ஐயர் - புதிய பயிற்சியாளர் சந்திரகாந்த் பண்டிட் கூட்டணியை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் என கேகேஆர் அணியின் தலைமைச் செயல் அதிகாரி வெங்கி மைசூர் கூறியுள்ளார்.

2022 ஐபிஎல் போட்டியில் கேகேஆர் அணி 14 ஆட்டங்களில் 6 இல் வெற்றி பெற்று 12 புள்ளிகளுடன் புள்ளிகள் பட்டியலில் 7 ஆம் இடத்தைப் பிடித்தது. கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ரஞ்சி கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் மத்தியப் பிரதேசம் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மும்பையை வென்று, போட்டியின் 87 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக சாம்பியன் ஆனது. 41 முறை ரஞ்சி சாம்பியனான மும்பையை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை மத்தியப் பிரதேச அணி வெல்ல முக்கியக் காரணம் - பயிற்சியாளர் சந்திரகாந்த் பண்டிட் (60). இந்திய அணிக்காக 5 டெஸ்டுகளும் 36 ஒருநாள் ஆட்டங்களும் விளையாடியவர் பண்டிட். ரஞ்சி கிண்ண போட்டியில் மும்பை, மத்தியப் பிரதேச அணிகளுக்காக விளையாடியுள்ளார்.

சந்திரகாந்த் பண்டிட் பயிற்சியில் ரஞ்சி கிண்ணத்தை வென்ற அணிகள்

2002-03 : மும்பை
2003-04 : மும்பை
2015-16 : மும்பை
2017-18 : விதர்பா
2018-19 : விதர்பா
2021-22 : மத்தியப் பிரதேசம்



# உலக பார்வை



## 10 குழந்தைகள் பெற்றால் பணப் பரிசு: ரஷ்ய ஜனாதிபதி புடின்

மக்கள் தொகை சரிவை எதிர்கொள்ள, 10க்கும் மேற்பட்ட குழந்தைகளை பெற்றால் +13,500 பரிசுத்தொகையை ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார்.



இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி புடின் கூறியிருப்பதாவது: ரஷ்யாவில் மக்கள் தொகை சரிவு ஏற்பட்டு வருகிறது. இதை எதிர்கொள்ள, 10க்கும் மேற்பட்ட குழந்தைகளை பெற்றெடுக்கும் ரஷ்ய பெண்களுக்கு 13 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படும். தங்களின் 10வது குழந்தைக்கு ஒரு வயது நிறைந்தவுடன், குழந்தையின் தாயிடம் இத்தொகை வழங்கப்படும்.

இது உக்ரைனில் நடந்த போரினால் மரணமடைந்துள்ள ரஷ்யாவின் மக்கள் தொகை நெருக்கடியை மீட்டெடுப்பதற்கான முயற்சியாகும் என அவர் கூறியுள்ளார் .

## மதநம்பிக்கையால் தடுப்பூசி போடாத மக்கள் - சிம்பாப்வேயில் 157 குழந்தைகள் உயிரிழந்த சோகம்

சிம்பாப்வேயில் தட்டம்மை நோய் வேகமாக பரவி வருவதால் 157 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். தட்டம்மை நோயினால் ஏற்படும் இறப்பு எண்ணிக்கை ஒரு வாரத்திற்குள் இரட்டிப்பாகும் என்று சிம்பாப்வே அரசாங்கம் எச்சரித்துள்ளது. நான்கு நாட்களில் நாடு முழுவதும் தட்டம்மை நோய் பாதிப்பின் எண்ணிக்கை 1,036 இலிருந்து 2,056 ஆக உயர்ந்துள்ளது. இறந்த குழந்தைகள் அனைவரும் தட்டம்மை தடுப்பூசி போடவில்லை என்று சிம்பாப்வே நாட்டின் தகவல் அமைச்சர் மோனிகா முட்ஸ்வாங்வா தெரிவித்துள்ளார் .

சிம்பாப்வேயில் முதல் தட்டம்மை தொற்று இந்த மாத தொடக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. தடுப்பூசி போடுவதில் நம்பிக்கை இல்லாத மதப் பிரிவுகளைச் சேர்ந்த ஆறு மாதங்கள் முதல் 15 வயது வரையிலான குழந்தைகள் இந்த நோயினால் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றனர் என அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பாக பேசிய அமைச்சர் முட்ஸ்வாங்வா, " உயிரிழந்த பெரும்பாலான குழந்தைகள் தட்டம்மைக்கு எதிராக தடுப்பூசி செலுத்திக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அவசரநிலையை சமாளிக்க அரசாங்கம் சிவில் பாதுகாப்பு சட்டத்தை செயல்படுத்தியுள்ளது. சிம்பாப்வே அரசாங்கம் தடுப்பூசி பிரச்சாரத்திற்கு ஆதரவைப் பெற பாரம்பரிய மற்றும் மதத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறது. அரசாங்கம் தரப்பில் தடுப்பூசி செலுத்தும் பணிகளை முடுக்கி விட்டுள்ளோம். அவசரநிலையைச் சமாளிக்க தேசிய பேரிடர் நிதியிலிருந்து பணம் எடுக்க அனுமதிக்கும் சிறப்புச் சட்டத்தை அமல்படுத்தவுள்ளோம்" என தெரிவித்தார்.

தட்டம்மை வைரஸ் பார்வை இழப்பு , மூளை வீக்கம், வயிற்றுப்போக்கு மற்றும் கடுமையான சுவாச நோய்த்தொற்றுகள் உள்ளிட்ட சில தீவிர சிக்கல்களை குழந்தைகளுக்கு உருவாக்குகிறது. மேலும், இந்த நோய் நோய் எதிர்ப்பாற்றல் குறைந்த குழந்தைகளின் மரணத்திற்கும் காரணமாகிறது. குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதில் தாமதம் ஏற்படுவதால், தடுக்கக்கூடிய நோய்கள்கூட ஆப்பிரிக்காவை அதிகம் பாதிக்கிறது. இதனால் தட்டம்மை பாதிப்பு ஆப்ரிக்காவில் 400 சதவீதம் அதிகரித்து வருவதாக கடந்த ஏப்ரல் மாதம் உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## 234 ரூபாவுக்கு விற்பனையாகும் பெற்றோல்! மக்கள் அதிர்ச்சி!

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக பெற்றோல், டீசல் விலை உயர்ந்து வரும் நிலையில் தற்போது மீண்டும் மிக அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அன்று(19) மட்டும் பாகிஸ்தானில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 6 ரூபாய் அதிகரித்து 234 என விற்பனையாகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



அதேபோல் டீசல் விலை 244 என்றும் மண்ணெண்ணெய் விலை 200 என்றும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த மூன்று மாதங்களாக பெற்றோல், டீசல் விலை உயராத நிலையில் இந்தியாவை விட இரு மடங்குக்கும் அதிகமாக பாகிஸ்தானில் பெற்றோல், டீசல் விலை விற்பனையாகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானின் பிரதமராக ஷரீப் பதவி ஏற்றதில் இருந்து பெற்றோல், டீசல் உள்பட எரிபொருளின் விலை மற்றும் மின்சார கட்டணம் அதிகரித்து வருவது மக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## சீனாவில் கடல் வாழ் உயிரினங்களுக்கு கொரோனா?

சீனாவின் ஜியாமெனில் 'கொவிட்-19' வைரஸ் பரவி வருவதால், கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மட்டுமின்றி, அவர்கள் கொண்டு வரும் மீன்களுக்கும் 'கொவிட்-19' பாதிப்பு உள்ளதா என பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.



ஜியாமென் என்பது சீனாவின் கடற்கரை நகரமாகும். இந்த நகரத்தில் இருந்து 40 பேர் 'கொவிட் 19' நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில், நகரத்தில் வசிக்கும் 5 மில்லியன் மக்களும் 'கொவிட் 19' பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

சுகாதார அதிகாரிகள் மீன்களுக்கு மட்டுமல்ல, மீனவர்கள் பிடித்து கரைக்குக் கொண்டு வரும் கணவாய் மற்றும் நண்டுகள் உட்பட பிற கடல்வாழ் உயிரினங்களுக்கும் பி.சி.ஆர். செய்தனர். இது குறித்த காணொளிக் காட்சிகள் தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

## 110 அடி நீள தலைமுடி : ப்ளோரிடா பெண்ணின் கின்னஸ் சாதனை

ஆஷா மண்டேலா உலகின் மிக நீண்ட தலைமுடி கொண்ட பெண் என்ற கின்னஸ் சாதனையை படைத்துள்ளார். இவரது கூந்தலின் நீளம் 33.5மீ, அதாவது 110 அடி! இவரது வயது 60. கடந்த 2009 நவம்பரில் 5.96மீ ஆக இருந்த இவரது தலைமுடியின் நீளம், இப்போது 33.5 மீற்றரை தொட்டுள்ளது. இவர் கடந்த 40 வருடங்களாக பராமரித்து தன் கூந்தலை வளர்த்து வருகிறார். ப்ளோரிடாவை சேர்ந்த ஆஷா மண்டேலா தன் நீண்ட கூந்தலை தனது கிரீடமாக பாவிப்பதாக பெருமிதம் கொள்கிறார் .

சிறுவயது முதலே கனவுகளில் ராஜ நாகம் வருவதும், அது தன்னுடன் பேசுவது போன்ற அனுபவங்களை கொண்டதால், தன் வாழ்க்கையை மாற்றியமைக்கும் ஒரு ஆன்மீக தேடலின் ஒரு வழியாக தான் தலைமுடியை வளர்க்க தொடங்கியதாக அவர் தெரிவித்துள்ளார் . "கனவுகளில் தோன்றும் ராஜநாகம் என்னிடம் பேசியது. மேலும் நான் தேர்ந்தெடுக்கப்பட்டவள் என்றும் கூறியது" என்கிறார் ஆஷா.

இவ்வளவு நீண்ட தலைமுடியை எப்படி பராமரிக்கிறீர்கள் என்று கேட்டபோது, "நான் வெளியில் எங்காவது செல்லும்போது தன் தலைமுடியை என் ஸ்லிங் பேகிற்குள் அடக்கிக்கொள்வேன். அப்போது தான் அது தரையில் படாமல் இருக்கும்" மேலும் தன் தலைமுடியை தன் கணவர் தான் கழுவுவார். ஒரு முறை தலைக்கு குளிப்பதென்றால், ஆறு போத்தல் ஷாம்பூ தேவைப்படும். ஈரமான முடியை உலர்த்த இரண்டு நாட்கள் தேவைப்படுகிறது என்கிறார் ஆஷா. சரியான பராமரிப்பு இல்லாவிட்டாலோ, அல்லது போஷாக்கான பொருட்களை தலைமுடிக்கு பயன்படுத்தவிட்டாலோ காலப்போக்கில் என் தலை முடி சத்தை இழந்து இறந்துவிடும் என்றும் அவர் தெரிவிக்கிறார் .





## மசூதியில் குண்டு வெடிப்பு - 30 பேர் பலி

ஆப்கானிஸ்தான் மசூதியில் புதன்கிழமை ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் 30 க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள பிரபல மசூதியில் புதன்கிழமை மாலை தொழுகை நடந்து கொண்டிருந்தபோது பயங்கர சத்தத்துடன் குண்டுவெடித்துள்ளது.

இந்த குண்டுவெடிப்பில் 30 க்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், படுகாயமடைந்தவர்களை மீட்புப் படையினர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

சமீபகாலமாக ஆப்கானிஸ்தானில் நடக்கும் தாக்குதல்களுக்கு ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்று வரும் நிலையில், இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி ஓராண்டு நிறைவு பெற்றுள்ள நிலையில், இந்த குண்டுவெடிப்பு சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒரே போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்ற இலங்கை





**Paralympic Committee of India**

4th Indian Open National Para-Athletics Championships-2022

18th & 19th August 2022, Bangalore, Karnataka

| Event No.: - 26 | Event: - Women's Long Jump | Sports Class: - T13,T37, T42, T46,T46 | Date: - 19/08/2022 | Time: - 17:30 |
|---|---|---|---|---|

| Order | BIB No. | Name of the Athlete | State/ Institute | Sports Class | Frist Trial | Second Trail | Third Trail | Fourth Trail | Fifth Trail | Sixth Trail | Best of all Trail | Point | Final Position |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4. | 296 | W A Janani Dhananjana | Sri Lanka | T47 | 04.68 | 04.94 | 04.49 | **05.01** | 04.53 | 04.70 | **05.01** | 690 | 1 |
| 6. | 295 | Kumudu Priyanka | Sri Lanka | T46 | 04.68 | **04.71** | 04.36 | 04.39 | 04.67 | 04.40 | **04.71** | 534 | 2 |
| 2. | 132 | Indu Gamit | Gujarat | T46 | 03.69 | 03.87 | 03.73 | **03.90** | 03.90 | 03.79 | **03.90** | 124 | 3 |
| 7. | 116 | Amisha Rawat | Delhi National Capital | T46 | 03.17 | 03.26 | 03.21 | X | 03.34 | X | **03.34** | 11 | 4 |
| 5. | 111 | Chiranjita Bharali | Assam | T37 | 02.16 | 02.32 | **02.49** | 02.25 | X | X | **02.49** | 1 | 5 |
| 1. | 117 | Bharti | Delhi National Capital | T42 | 01.47 | 01.67 | 01.70 | X | 01.66 | **01.81** | **01.81** | 0 | 6 |
| 3. | 135 | Tejal Damor | Gujarat | T13 | DNS | DNS | DNS | DNS | DNS | DNS | **DNS** | | |

4-ஆவது இந்திய ஓபன் தேசிய பாரா தடகளப் போட்டியில் தாய்நாட்டிற்காக ஜனனி தனஞ்சனா தங்கப் பதக்கத்தை வென்றார். பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் 5.01 மீட்டர் தூரம் பாய்ந்து அவர் தங்கப் பதக்கம் வென்றார். இந்தப் போட்டி நான்காவது முறையாக இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்று வருகின்றது. இதேவேளை பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் 4.71 மீட்டர் தூரம் பாய்ந்து இலங்கையின் மற்றுமொரு வீராங்கனையான குமுது பிரியங்க வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார்.

# பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தினால் அவசரகால மனிதாபிமான உதவி வழங்கி வைப்பு

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பதுளை மாவட்டத்தின் லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுல்சீம தோட்டக்குடியிருப்பில் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் வசதி குறைந்த நூற்றுக்கு மேற்பட்ட விதவைகள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தினால் வழங்கி வைக்கப்பட்டது. இதில் கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், தோட்ட நல அதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம் ஆலோசகர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

இதற்காக பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளிநாட்டு திட்டச் செயலாளர் எஸ்.பாலசிங்கம் அவர்களின் தலைமையில் மலையகத்தில் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் வசதி குறைந்த குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்குவதற்குரிய நிதி அனுசரணை செய்துவருகின்றனர். இதனை நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் மற்றும் ப்ரண்ஷிப் பௌண்டஷன் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.













இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 21.08.2022 அன்று வெளியிடப்பட்டது.